Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU
National TAMIL DAILY

தேசிய தினசரி

தபாற் பெட்டி எண்: 49

போன்: 389

மலர் 

யாழ்ப்பாணம், பிலவ ஆனி 7 ஆம் நாள் முஹர்ரம் 7 (21-6-61) புதன்கிழமை இதழ் 10

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
இன்பம் தரும் 33 303 3003 பத்திகளை
உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
பெங்களூர்–2.

# வல்வெட்டித்துறை, மன்னார்:

## செனட்டர்நடேசன்புகார்

## அவசரகால நீடிப்புக்கு மந்திரியின் சமாதானம்

கொழும்பு, புதன்

**"சட்டம், ஒழுங்கு ஆகியவற்றைப் பாதுகாக்கவும், பிழையான வழியில் செலுத்தும் அரசியல்வாதிகளிடமிருந்து மக்களைப் பாதுகாக்கவும் அவசரகாலப் பிரகடனம் அவசியம் நீடித்து இருக்க வேண்டும்" என இன்றைய செனட் கூட்டத்தில் செனட் சபை முதல்வர் திரு. ஏ. பி. ஜயசூரியா அறிவித்தார்.**

வல்வெட்டித்துறையில் சமீபத்தில் சிலர் கைதுசெய்யப்பட்டதுபற்றி செனட்டர் நடேசன் கேட்ட ஒரு கேள்விக்கு திரு. ஜயசூரியா பதிலளிக்கையில் பின்வருமாறு கூறினார்:

"வல்வெட்டித்துறை, கள்ளக்கடத்தலில் பிரசித்திபெற்ற இடமாகும். இந்நாட்டுக்குள் துப்பாக்கிகளைக் கடத்திவர கள்ளக்கடத்தல்காரர்கள் முயற்சி செய்தார்கள் என்ற சந்தேகத்தின்பேரில்தான் அங்கு கைதுகள் நடைபெற்றன. கள்ளக்கடத்தலில் முக்கியத்துவம் பெற்றவர்கள் மட்டுமே அங்கு கைதுசெய்யப்பட்டனர். அத்துடன் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த 16 பேர் விடுவிக்கப்பட்டனர்."

### மொழிப்பிரச்சினை

மொழிப்பிரச்சினை பற்றி செனட்டர் ஜயசூரியா குறிப்பிட்டதாவது:-

"மொழிப்பிரச்சினைக்கு முடிவு காண்பதற்கு அரசாங்கம் தொ

(5ம் பக்கம் பார்க்க)

## ஐச்மன் விசாரணை

ஜெரூஸலம், ஜூன் 20

9 வாரமாக இங்கு நடைபெறும் ஐச்மன் விசாரணையில் 3 பேர் கொண்ட வாதிதரப்பு நடவடிக்கைகள் இன்று முடிவடைந்தன. ஐச்மன், குண்டுகள் புகமுடியாத தனது கூண்டிலிருந்து இன்று வாக்குமூலம் அளித்தார்.

## "குண்டசாலைப் பெண்கள் சேலை சட்டை அணிய வேண்டும்"

கொழும்பு, செவ்வாய்

குண்டசாலை விவசாயப் பயிற்சிப் பாடசாலையில் பயிலும் மாணவிகள் வேலை செய்யும் பொழுது காற்சட்டை அணியாது சேலையும் சட்டையும் அணிய வேண்டுமென்று தற்காலிக விவசாய நில நீர்ப்பாசன மந்திரி திரு. தென்னக்கூன் அறிவித்துள்ளார்.

காற்சட்டை அணிந்து வேலை செய்யும் இவர்களைக் காட்டிலும் கிராமத்திலுள்ள வயல்களில் வேலை செய்யும் பெண்கள் சேலை அணிந்து மிகவும் சுறுசுறுப்பாக வேலை செய்வதாகவும் காற்சட்டையும் இறுக்கமான மேற்சட்டையும் மிகவும் அருவருக்கத்தக்கதாக இருப்பதாகவும் மந்திரி குறிப்பிட்டுள்ளார்.

# பல்கலைக்கழகத்தில் வெளிமாணவர்கள் நிலைமை

## இன்று மந்திரிசபை முடிவு செய்யும்

கொழும்பு, புதன்

**பல்கலைக்கழத்தில் வெளி மாணவர்களின் நிலை பற்றி நாளை மந்திரிசபையில் தீர்மானிக்கப்படும் என பிரதம மந்திரி ஸ்ரீமதி பண்டாரநாயக்கா இன்று கூறினார்.**

திரு. டொரிக் டி' சூசாவின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"சென்ற கிழமை பல்கலைக்கழக அதிகாரிகளுடன் வெளி மாணவர் நிலைமைபற்றிப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டது. இது சம்பந்தமாக பொருத்தமான யோசனையை நாளை மந்திரி சபைக்குச்சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சர் கேட்கப்பட்டிருக்கிறார்" என்றும் பிரதமர் தெரிவித்தார்.

# ஸ்தலஸ்தாபன கமிஷன் இல்லாதது சட்டத்துக்கு மாறுகும்

## மந்திரியின் புதிய உத்தேசம்

கொழும்பு, செவ்வாய்

ஸ்தலஸ்தாபன சர்வீஸ் கமிஷன் இப்போது இல்லாததால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் இடமாற்றம், சம்பள உயர்வு, பிரயாணப்படிச் செலவு முதலியவை எதுவும் இப்போது சட்டப்படி அனுமதிக்க முடியாத நிலையிலுள்ளது.

பழைய கமிஷனின் ஆயுட்காலம் இம்மாதம் 14-ந்திகதியுடன் முடிந்தது. புதிய கமிஷனை உடன் நியமிக்காதது சட்டத்துக்கு மாறுகுமென்று 'அட்டோர்ணி ஜெனரல், ஸ்தலஸ்தாபன மந்திரிக்குத் தெரிவித்திருக்கிறார்.

புதய கமிஷனில் ஐந்தே மெம்பர்கள் இருக்கும்படியாகத் தாம் புதியசட்டம் கொண்டுவரப்போவதாயும், இந்த ஐவரும் தம்மாலேயே நியமிக்கப் பெறுவரென்றும் ஸ்தலஸ்தாபன மந்திரி தெரிவித்துள்ளார்.

பழைய கமிஷனில் 9 மெம்பர்கள் இருந்தனர். ஸ்தலஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் அதில் அங்கம் வகித்தனர்.

மந்திரி உத்தேசித்துள்ள மசோதாவை இன்னும் அரசாங்கம் அங்கீகரிக்கவில்லை. புதியசட்டம் நிறைவேறுவதற்கிடையே பழைய சட்டப்படி புதிய கமிஷனை நியமிப்பதொன்றுதான் சட்டப்படி மந்திரிக்கு ஒரே வழி என்று ஸ்தலஸ்தாபன அதிகாரி ஒருவர் தெரிவிக்கிறார்.

பார்லிமெண்டில்

# அவசரகால நெருக்கடிபற்றி நாளை நான்கு மணி விவாதம்

கொழும்பு, செவ்வாய்

**வியாழக்கிழமையன்று பார்லிமெண்ட் சபையிலே அவசர நெருக்கடியைப்பற்றி நான்குமணி நேரம் விவாதம்நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இந்த விவாதம் அன்று மாலை 5 மணிமுதல் நடைபெறும்.**

**நேற்று பார்லிமெண்ட் கட்டடத்தில் சபாநாயகரின் தலைமையில் கட்சித் தலைவர்களின் கூட்டம் நடந்தபோது இத்தீர்மானம் செய்யப்பெற்றது.**

வர்த்தகர் லைசென்ஸ் மசோதா, மோட்டார் போக்குவரத்து திருத்த மசோதா முதலிய கருத்து வேற்றுமைக்கான மசோதாக்கள் அன்று விவாதத்துக்கு வரும். இவ்விரு மசோதாக்களையும் செனட் சபை நிறைவேற்றியவுடன் பார்லிமெண்ட் சபையின் இந்தக் கூட்டம் கலைக்கப்பெறும்.

# தபால்மூலம் சர்வகலாசாலை பாடங்கள் போதனை?

## "வெளி மாணவர்களை பாதுகாக்க"

கொழும்பு, செவ்வாய்

இலங்கைச் சர்வகலாசாலை பட்டப் பரீட்சைக்கான வெளி மாணவர்களின் வசதிக்காக தபால் மூலம் பாடங்களைப் போதிக்கக் கூடிய ஒரு 'பீரோ' ஸ்தாபனத்தை அமைப்பது பற்றி அச்சர்வகலாசாலை அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

கண்டவர்களும் "டியூடோரியல்"களை ஆரம்பித்து பணம் பறிக்காமல் மாணவர்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடனேயே இந்த யோசனை செய்யப்பட்டுவருகிறது.

## இலங்கைக்கு பின்லாந்து தூதர்

கொழும்பு, செவ்வாய்

டில்லியிலுள்ள பின்லாந்து தூதர், இலங்கைக்கும் தூதுவராகக் கடமையாற்ற நியமிக்கப்பட்டுள்ளார்.

# பத்திரிகைகளில் குதிரைப் பந்தயவிவரங்கள் இனி இல்லை

கொழும்பு, செவ்வாய்

இலங்கை குதிரைப்பந்தய சங்கம் (டர்ப் கிளப்) வருகிற குதிரைப்பந்தய ஓட்டத்தைப் பற்றிய "ஹாண்டி காப்" விவரங்களைப் பத்திரிகைகளில் வெளியிட வழங்குவதை நேற்றுடன் நிறுத்திவிட்டது. புதிய சட்டம் அமுலுக்கு வருவதை முன்னிட்டே இவ்விதம் செய்துள்ளனர்.

குதிரைச் சொந்தக்காரர்கள், பழக்குபவர்கள், சங்க அதிகாரிகள் இவர்களுக்கு மட்டுமே "ஹாண்டிக்காப்" துண்டுப் பிரசுரம் கொடுக்கப்பட்டது.

## ஜூன் 25-ல் காங்கோ பார்லிமெண்ட் கூடும்

லியப்போல்ட்வில்லி, ஜூன் 20

வருகிற 25-ம் திகதி லியப்போல்ட்வில்லியில் காங்கோ பார்லிமெண்டைக் கூட்டுவதென காங்கோ மத்திய அரசாங்கமும், லுமும்பா ஆதரவான கிஸங்கா அரசாங்கமும் இணங்கியுள்ளன.

# மதத் தலைவர்களின் பெயர்களைவிட சினிமா நட்சத்திரங்களை அறிவர்

## இளைஞர்கள் நிலைபற்றி பாடசாலை ஆசிரியர்

கொழும்பு, செவ்வாய்

"தங்கள் சொந்த மதத்தலைவர்களின் பெயர்களைவிட, சினிமா நட்சத்திரங்களின் பெயர்களைப் பெரும்பாலான இளைஞர்கள் அறிந்திருக்கிறார்கள்" என இஸ்லாமியப் புதுவருட விழாவன்று புத்தளம் மத்ருசதுல் கசிமியா அரபுப் பாடசாலை ஆசிரியர் மௌலவி என். அபுசாலிஹ் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், முஸ்லிம் பெண்கள் பண்பான முறையில் நடுத்தரமான உடை அணிந்து கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார்.

## 120 லட்சம் ரூபாய் கதர் உற்பத்தி

சென்னை, ஜூன் 21

தமிழ்நாட்டில் சென்ற ஆண்டு 1,20,00,000 ரூபாய் பெறுமதியான கதர் உற்பத்தி செய்யப்பட்டதாய் அறிவிக்கப்படுகிறது.

## வரிவிளம்பர விகிதங்கள்

ஜனனம், திருமணம், மரண அறிவித்தல், வீடு வளவு விற்பனவு, தேவை மற்றும் வாங்கவோ, விற்கவோ இது போன்ற சகல அறிவித்தல்களும் 'ஈழநாடு' பத்திரிகையில் வரிவிளம்பரம் செய்ய ஏற்றுக்கொள்ளப்படும்.

முதல் 20 வார்த்தைகளுக்கு ரூ.3-00. மேற்பட்ட ஒவ்வொரு வார்த்தைக்கும் மேலதிகமாக 10 சதம் அறவிடப்படும்.

### மலிவு விற்பனை

1. கைத்தறி நூற் சேலைகள். சாதாவில் மெல்லிய கரையும் குஞ்சமுமுடையது. பெரிய கட்டங்களுடன் பொட்டாப்புடையதும் எல்லா நிறங்களிலுமுண்டு. ரூ. 12-85 மாத்திரம். வி. பி. பி. அங்கீகரிக்கப்படும். டயரும்ஸ், யாழ்ப்பாணம்.

2. பல நிறங்களில் கைத்தறி நூற் சேலைகள். சுவாலை டிசைன்களில் மெல்லிய போடரும் குஞ்சமுமுடையது. ரூ. 13-85 மாத்திரம், வி. பி. பி. அங்கீகரிக்கப்படும். டயரும்ஸ், யாழ்ப்பாணம்,

3. அழகான கட்டங்களுடன் மெல்லிய போடரும் குஞ்சமுமுடைய கைதறி நூற் சேலைகள். கவர்ச்சியான நிறங்களில், ரூ. 13-85 மாத்திரம். வி. பி. பி. ஏற்கப்படும். டயரும்ஸ், யாழ்பபாணம்.

4. கைத்தறி நூற் சேலைகள்.பலவர்ணங்களில் ஜருகைப் பூக்களிட்டது. மெல்லிய கரையுடன் குஞ்சமுடையது. ரூ. 18-50 மாத்திரம். வி. பி. பி. அங்கீகரிக்கப்படும். டயரும்ஸ், யாழ்ப்பாணம்.

5. சலவை செய்யாத படுக்கை விரிப்புகள். 54 × 90 ரூ. 3-50 ஷ சலவை செய்த கனத்த ரகம் 54 × 90 ரூ 4-50. வி. பி. பி. ஏற்கப்படும். டயரும்ஸ், யாழ்ப்பாணம்.

6. பிள்ளைகளுக்கான ரோம்பர் சூட்டுகள். ரோஸ், மஞ்சள் நிறங்களில் 16 × 18 சைஸ் மாத்திரமுண்டு. ரூ. 3-25. வி பி. பி. ஏற்கப்படும். டயரும்ஸ் யாழ்ப்பாணம்.

7. வெள்ளை மில் சாறிகள். பலநிறக் கரைகளுடையதும் பாவிக்கக்கூடியதும். 6 யார் ரூ. 7-00. வி. பி. பி. ஏற்கப்படும். டயரும்ஸ், யாழ்ப்பாணம்.

8. டயரும்ஸ் விற்பனையில் ஒற்றைச் சைஸ்களில் பிரேசியர்கள், வெள்ளை, ரோஸ் நிறங்களில். ரூ. 1-75 மாத்திரம். டயரும்ஸ், யாழ்ப்பாணம்.

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### தேவை

மனேஜர்: சம்பளம் 115 | மாதம். பிணைத்தொகை: ரொக்கம் ரூபா 500 | ஆதனம், ரூபா 1000 | பெறுமதி. கூட்டுறவுப் பரீட்சை விசேஷமானது. தலைவருக்கு மனுச் செய்க — அண்ணுங்கை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கோண்டாவில்.

### றேடியோ

உங்கள் றேடியோவின் தொந்தரவுகளைச் சுலபமான முறையில் நீக்கிப் புதியது போல் திருத்தித் தருவதற்கு, றேடியோ எஞ்ஜினியேர்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

ஹில்மன் ஈ.எல். 5000 இலக்க வரிசையுள்ள கார் நல்ல நிலைமையிலுண்டு. விலை ரூ. 3500. டயரும்ஸ், யாழ்ப்பாணம்.

1. பலவிதமான கோல்ட்பெயின்ற் நைலோன் சாறிகள் வ. வி. 42-50 இப்போ 26-50. டயரும்ஸ், யாழ்ப்பாணம்.

2. உடல் முழுவதும் வெல்வெற் அச்சடியன் நைலோன் சாறிகள் வ. வி. 45-00 இப்போ 25-00. டயரும்ஸ், யாழ்ப்பாணம்.

3. பல வர்ணந்திட்டிய நைலோன் சேலைகள் வ. வி. 47-50 இப்போ 27-50. டயரும்ஸ், யாழ்ப்பாணம்.

4. பலவிதமான ஸ்கேட் போடருள்ள வெல்வெற் புளக் நைலோன் சாறிகள் வ. வி 47-75 இப்போ 27-50. டயரும்ஸ், யாழ்ப்பாணம்.

5. உடல் முழுதும் கோல்ட் பெயின்ற் கொடி டிசைன்களில் நைலோன் சேலைகள் வ. வி. 37-50 இப்போ 24-50. டயரும்ஸ், யாழ்ப்பாணம்.

6. டியூடொறப்ஸ் டிசைன்களில் நைலோன் சாறிகள் வ. வி. 55-00 இப்போ 29-50. டயரும்ஸ், யாழ்ப்பாணம்.

7. பூவேலைப்பாடுள்ள டக்கா பட்டுச்சேலைகள். 7 சேலைகள் மாத்திரம் வ.வி. 75-00 இப்போ 37-50. டயரும்ஸ், யாழ்ப்பாணம்.

8. கட்டங்களிட்ட ஆட் காஞ்சிபுரம் சேலைகள் றிபன் போடரும் குஞ்சமுமுடையது. சொற்ப சேலைகளே இருக்கின்றன. 11-75 மாத்திரம். டயரும்ஸ், யாழ்ப்பாணம்.

9. 2-ம்நிர் ரககோடம்பாக்கம் சேலைகள் 6 சேலைகளே உண்டு. 17-50 மாத்திரம். டயரும்ஸ், யாழ்ப்பாணம்.


# பாகிஸ்தான் ஜனுதிபதி வாஷிங்டன் செல்கிருர்

வாஷிங்டன், ஜூன் 20

பாகிஸ்தான் ஜனுதிபதி ஜெனரல் அயூப்கான் அடுத்த மாதம் வாஷிங்டனுக்கு விஜயம் செய்வாரென்று இன்று அறிவிக்கப்பட்டது.

இவ்வருடம் நவம்பர் மாதத்தில் தான் ஜனுதிபதி அயூப்கான் அமெரிக்காவுக்கு விஜயம் செய்வதாக முன்னர் திட்டமிடப்பட்டிருந்தபோதிலும் இன்றுள்ள நிலைமை காரணமாக அயூப்கான் அடுத்த மாதமே அமெரிக்காவுக்கு விஜயம்செய்கிருர். தென் கிழக்காசியாவில் இன்றுள்ள நிலைமை குறித்து அமெரிக்க ஜனுதிபதியுடன் பாகிஸ்தான் ஜனுதிபதி பேச்சுவார்த்தை நடத்துவார்.

ஜூலை மாதம் 11ந் திகதியிலிருந்து மூன்று தினங்கள் வாஷிங்டனிலும் பின்னர் நியூயோர்க்கில் மூன்றுதினங்களும் ஜனுதிபதி அயூப்கான் தங்கியிருப்பார்.

## 78 நகரங்களில் கலைஞர் யாத்திரை

நியூயோர்க், ஜூன் 20

இந்தியாவிலும் இலங்கையிலுமிருந்து சர்வதேசப் புகழ்பெற்ற மூன்று கலைஞர்களைக் கொண்ட தூதுக்கோஷ்டிகளை 78 நகரங்களில் கரையோரச் சுற்றுப்பிரயாணம் செய்ய நியூயோர்க்கிலுள்ள ஆசியசங்கம் ஒழுங்குசெய்துள்ளது.

இலங்கையிலிருந்து பிரபல கண்டிய நடனக் கலைஞர் திருகுணேயாவின் தலைமையில் ஒரு கலைஞர் கோஷ்டியும் இந்தியாவிலிருந்து பிரபல சிதார் வாத்திய வித்துவானும், இசையமைப்பாளருமான பண்டித ரவிசங்கர் தலைமையில் ஒரு கலைஞர் கோஷ்டியும் இச்சுற்றுப்பிரயாணத்தில் செல்வர்.

# வாழைப்பழ விலை குறைப்புக்கு ஆட்சேபம்

## பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், புதன்

அரசாங்கம் வாழைப்பழத்தின் விலையைத் திடீரெனக் குறைத்தது சம்பந்தமாக வலிகாமம் கிழக்கு வாழைக்குலைச் சங்கமும் வடயகுதி விவசாய விருத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கச் சமாஜமும் தமது ஆட்சேபனையைத் தெரிவித்திருப்பதாக அறியவருகிறது. இது சம்பந்தமாக உணவுமந்திரியின் நிரந்தரக்காரியதரிசியை வாழைக்குலைக் சங்கம், வடபகுதி கூட்டுறவுச் சமாஜம் ஆகியவற்றின் பிரதிநிதிகளின் தூதுக்கோஷ்டியொன்று மிக விரைவில் பேச்சுவார்த்தைகள் நடத்தவிருப்பதாக அறியப்படுகிறது.

ஜனவரிமாதம் தொடக்கம் முதல் ஏழுமாதங்களுக்கும் ஒரு வாழைப்பழத்தின்விலை 3 சதமாகவும் எஞ்சிய மாதங்களுக்கு இரண்டரைச்சதமாகவும் இருந்துவந்த வாழைப்பழத்தின் விலையில் அரைச்சதத்தை இப்பொழுது அரசாங்கம் குறைத்திருப்பதாகத் தெரிகிறது.

அரசாங்கத்தின் இன்றைய நிர்ணயத்தின்படி முதல் ஏழு மாதங்களுக்கு ஒரு பழததுக்கு இரண்டரைச்சதமும் மிகுதியான ஐந்து மாதங்களுக்கும் ஒரு பழத்துக்கு இரண்டு சதமும் கொடுக்கப்படுமென அரசாங்கம் அறிவித்துள்ளது.

வாழைப்பழ விலையை அரசாங்கம் குறைத்தமைக்கு வலிகாமம் கிழக்கு வாழைக்குலைச் சங்கம் ஆட்சேபம் தெரிவித்துள்ளது. இதுசம்பந்தமாக ஒரு தூதுக்கோஷ்டி உணவுமந்திரியின் நிரந்தரக்காரியதரிசியைக் கண்டு பேச்சுவார்ப்தை நடத்த மிக விரைவில் கொழும்புக்குச் செல்லுமெனத் தெரிகிறது.

இதுசம்பந்தமான பேச்சுவார்த்தைக்கான திகதியைக குறிப்பிட்டுத்தரும்படி நிரந்தரக்காரியதரிசியைத் தூதுக்கோஷ்டி கேட்டிருக்கிறதாகத் தெரிகிறது.

## 55 வயதில் கட்டாய ஓய்வு

### விதிவிலக்கு வாபஸ்

கொழும்பு, செவ்வாய்

55 வயதுக்கு மேற்பட்ட அரசாங்க சேவையாளர் கட்டாய ஓய்வு பெறவேண்டுமென்று சில வாரங்களுக்குமுன் அரசாங்கம் செய்த தீர்மானத்தில் எவருக்கும் விதிவிலக்களிப்பதில்லை என்று இப்பொழுது முடிவு செய்யப்பட்டுள்ளது.

நிர்வாக, குமாஸ்தா சேவையிலுள்ள அரசாங்க ஊழியர்கள் 55 வயதில் ஓய்வு பெறவேண்டுமென்று சில வாரங்களுக்குமுன் அரசாங்கம் முடிவு செய்தது. நாட்டின் நலனுக்கு அவசியமெனக் கருதப்படுபவர்களை 55 வயதுக்கு மேலும் சேவையில் வைத்திருக்க அனுமதிக்கப்படலாமென்று விதிவிலக்களிப்பதென்றும் அரசாங்கம் தீர்மானித்திருந்தது.

இந்த விதிவிலக்களிப்பதென்ற தீர்மானத்தை வாபஸ் பெறுவதென்று அரசாங்கம் இப்பொழுது தீர்மானித்துள்ளது.

## பிக்குகளுக்கு வயோதிப விடுதி

கொழும்பு, செவ்வாய்

பௌத்த பிக்குகளுக்கான முதலாது வயோதிப விடுதி இம்மாதம் 30-ந் திகதி பத்தேகமையில் திறக்கப்படவிருக்கிறது.

ஆசிரமங்களிலும், பான்சாலைகளிலும் வயோதிய பௌத்த பிக்குகள் தங்கள் கடைசிக் காலத்தை இதுவரை கழித்து வந்தனர். சமீபத்தில் பௌத்த கோயில்களில் எவ்வித உதவியும் புரியக்கூடிய நிலையில்லாத சில பௌத்த பிக்குகள் அரசாங்க வயோதிப இல்லங்களில் இடம்பெற்றனர்.

அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் பௌத்த பிக்குகளுக்கென தனியாக ஒரு வயோதிப விடுதியை ஆரம்பிப்பதென்று முடிவுசெய்துள்ளது. இம்மாதம் 30ந் திகதி திறக்கப்படவிருக்கும் இவ்விடுதியில் ஆரம்பத்தில் 12 பௌத்தபிக்குகளுக்கே இடவசதியிருக்கும்.

## வண்டிச் சக்கரங்கள் களவு

### இருவர் கைது

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாநகரசபைக்குச் சொந்தமான வண்டிச் சக்கரங்கள் 8 திருடப்பட்டது சம்பந்தமாக சந்தேகத்தின் மீது இருவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனரெனத்தெரிகிறது.

இது சம்பந்தமாக மாநகரசபைக் காவல்காரர் இருவரையும் தற்காலிகமாக வேலையினின்றும் மேயர் திரு. டி. எஸ். துரைராஜா நீக்கியிருக்கின்ருரெனத் தெரிகிறது.

இதுபற்றி பொலிசார் மேலும் புலன்விசாரணை செய்துவருகின்றனர்.

## அவகாசமும் நஷ்ட ஈடும்

### என்ஜினியர்கள் கோரிக்கை

கொழும்பு, செவ்வாய்

உத்தியோக மொழியில் தேர்ச்சிபெறுவதற்கு கொடுக்கப்பட்டுள்ள கால எல்லையை நீடிப்பதற்கும் உத்தியோக மொழியில் தேர்ச்சிபெற முடியாத நிலையில் ஓய்வுபெறுபவர்களுக்கு நஷ்டஈடு கொடுப்பதற்கும் அரசாங்கத்தைத் கேட்பதென்று மராமத்து இலாகா என்ஜினியர் சங்கம் நேற்று தீர்மானித்தது.

## மரணதண்டனை நிறைவேற்றம்

### ஆகஸ்ட் மாதத்துக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, செவ்வாய்

பண்டாரநாயக்கா கொலை வழக்கில் குற்றவாளிகளாகக் காணப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்ட புத்தரகித்த, எச். பி. ஜயவர்த்தன, சோமராம ஆகியோரின் மரண தண்டனை நிறைவேற்றப்படுவதற்கான தினங்கள் ஆகஸ்ட் மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

புத்தரகித்தவுக்கு இம்மாதம் 20ந் திகதியும் எச். பி. ஜயவர்த்தனவுக்கு 21ந் திகதியும் சோமராமாவுக்கு 22ந்திகதியும் நிறைவேற்றப்படவிருந்த மரணதண்டனை அவர்கள் மூவரும் அப்பீல் செய்திருப்பது காரணமாக ஆகஸ்ட்மாதம் 10, 11, 12ந் திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## பேராதனைப் பல்கலைக்கழகம்

கண்டி, செவ்வாய்

விஜயவர்த்தன மண்டபம் உட்படப் பேராதனைப் பல்கலைக் கழகத்திலுள்ள சகல விடுதி மண்டபங்களும் ஜூன் மாதம் 21ம் திகதி மாணவரின் உபயோகத்துக்குத் திறக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விசேஷ ஆங்கில வகுப்பைப் பின்பற்றியுள்ள மாணவர்களை விட (ஆண்கள், பெண்கள் உட்பட) ஏனைய புதிய மாணவர்களும் ஜூன் மாதம் 21ம்திகதி மண்டபங்களுக்குச் சென்று தங்குவர்.

விசேஷ ஆங்கில வகுப்பைப் பின்பற்றியவர்களாகிய சிரேஷ்ட மாணவர்கள் ஜூன்மாதம் 26ந் திகதி விடுதி மண்டபங்களைப் போயடைவார்கள். புதிய கல்வி வருடத்தின் (1961-62) விரிவுரைகள் ஜூன்மாதம் 28ம் திகதி ஆரம்பமாகும்.

டாக்டர் எஸ். வித்தியானந்தன், விஜயவர்த்தன விடுதிக்கு மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். ஜூன் 21ம் திகதி தொடக்கம் இராமநாதன் விடுதி மண்டபத்தில் பெண்கள் தங்குவர். இதற்குத் திருமதி குக் மேற்பார்வையாளராகக் கடமையாற்றுவார்.




# அஸ்ஸாமில் மீண்டும் கலகம்

## துப்பாக்கிப்பிரயோகத்தில் 7 பேர் மாண்டனர்

சில்சார், ஜூன் 20

**அஸ்ஸாம் ராஜ்யத்தில் கச்சார் ஜில்லாவிலுள்ள கயிலாக்கண்டி என்ற பகுதியில் நேற்று நடந்த ஒரு கலகத்திலும் அதை அடக்குவதற்குப் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததிலும் மொத்தம் ஏழு பேர் கொல்லப்பட்டிருக்கலாமென்றும் பலர் காயமடைந்துள்ளனரென்றும் அறிவிக்கப்படுகிறது.**

அஸ்ஸாம் ராஜ்ய மொழியாக வங்காள மொழியையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கோரி சமீபத்தில் கச்சார் ஜில்லாவில் சங்கராம் பரிஷத் என்ற இயக்கம் கிளர்ச்சி நடத்தியது. இக்கிளர்ச்சியைத் தொடர்ந்து சில்சாரில் கலகம் ஏற்பட்டது. இக் கலகத்தில் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பதினொரு பேர் மாண்டனர். அஸ்ஸாம் ராஜ்ய மொழிப் பிரச்னைக்கு தீர்வு காணுமுகமாக இந்திய உள்விவகார மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி அஸ்ஸாம் சென்று பல்வேறு தரப்பினருடனும் பேச்சு வார்த்தை நடத்தி ஒரு திட்டத்தை வெளியிட்டார். இத் திட்டத்தை கச்சார் ஜில்லா சங்கராம் பரிஷத்தும் காங்கிரசும் ஏற்றுக்கொள்ளவில்லை. சங்கராம் பரிஷத் தொடர்ந்து கிளர்ச்சி செய்து வந்தது. சில தினங்களுக்கு முன் கச்சார் ஜில்லா உதவிக் கமிஷனருக்கும் சங்கராம் பரிஷத் தலைவர்களுக்குமிடையில் ஏற்பட்ட ஒரு உடன்பாட்டைத் தொடர்ந்து கிளர்ச்சியைக் கைவிட்டு மீண்டும் திரு. லால்பகதூர் சாஸ்திரியுடன் பேச்சுவார்த்தை நடத்த பரிஷத் ஒப்புக்கொண்டது. உதவிக் கமிஷனருடன் ஏற்பட்ட உடன்பாடு காரணமாக மொழிக் கிளர்ச்சி காரணமாக கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த சத்தியாக்கிரகிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

### எதிர்ப்பு இயக்கத்தினர் ஆர்ப்பாட்டம்

சத்தியாக்கிரகிகள் விடுதலை செய்யப்பட்டதையும் வங்காள மொழியையும் அஸ்ஸாம் ராஜ்ய மொழியாக்க வேண்டுமென்று கோரி சங்கராம் பரிஷத் தொடர்ந்து கிளர்ச்சி செய்துவருவதையும் எதிர்த்து நேற்று ஒரு கும்பல் ஆர்ப்பாட்டம் நடத்தியது.

கச்சார் ஜில்லாவில் கயிலாக்கண்டி என்ற இடத்தில் நடைபெற்ற இந்த எதிர்ப்பு இயக்க ஆர்ப்பாட்டத்தில் சுமார் 10,000 பேர் கலந்து கொண்டனர்.

### தீவைத்தனர்; சூறையாடினர்

நான்கு திசைகளிலிருந்து கயிலாக்கண்டி பட்டினத்தை நோக்கி வந்துகொண்டிருந்த இக் கும்பல் கடைகளைச் சூறையாடியது; வீடுகளுக்குத் தீ வைத்தது; சொத்துக்களுக்குச் சேதம் விளைத்தது.

ஆர்ப்பாட்டக்காரர்களைப் பொலிசார் பல தடவைகள் எச்சரித்தும் அவர்கள் கட்டுக்கடங்காமல் போகவே பொலிசார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்தனர். இதற்கும் ஆர்ப்பாட்டக்காரர் கலைந்து செல்லாம் தொடர்ந்தும் தீ வைப்பதில் ஈடுபட்டிருந்ததால் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டி நேரிட்டது.

### ஒருவாரத்துக்கு ஊரடங்குச் சட்டம்

தீவைப்பு நடவடிக்கைகள் மோசமாகி இதர இடங்களுக்கும் பரவாமல் தடுக்கவே பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்யநேர்ந்ததென்று அறிவிக்கப்பட்டது. துப்பாக்கிப் பிரயோகத்திலும் கலகத்திலும் மொத்தம் ஏழு பேர் மாண்டிருக்கலாமென்று அஞ்சப்படுகிறது. பலர் காயமடைந்தனர்.

கயிலாக் கண்டிப் பகுதியில் இப்பொழுது ஒருவாரகாலத்துக்கு 12 மணிநேர ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. நான்கு பேர்களுக்குமேல் கூடி நிற்கக் கூடாது. வீதியில் செல்லக் கூடாது என்று தடை விதிக்கும் 144வது சட்டமும் அங்கு பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்றிரவு எட்டுமணிக்கெல்லாம் அங்கு அமைதியேற்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டது. என்றாலும் மீண்டும் கலகம் ஏற்படாமல் தடுக்குமுகமாக முக்கிய இடங்களில் இராணுவமும் பொலிசாரும் ரோந்து சுற்றி வருகின்றனர்.

### மந்திரியின் வேண்டுகோள்

சங்கராம் பரிஷத்தும் எதிர்ப்பு இயக்கத்தினரும் கிளர்ச்சி முறைகளைக் கைவிடவேண்டுமென்று அஸ்ஸாம் ராஜ்ய உணவு மந்திரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## நேரு - கென்னடி சந்திப்பு

### ஆலோசனை நடந்தது உண்மை

வாஷிங்டன், ஜூன் 20

பாரதப் பிரதமர் நேரு அமெரிக்க ஜனாதிபதி கென்னடியைச் சந்திப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்படுவதுபற்றி ஆலோசனை நடைபெற்றது உண்மையென்று அமெரிக்க ராஜாங்க காரியாலய அதிகாரியொருவர் தெரிவித்தார்.

நேரு-கென்னடி சந்திப்பு பற்றி ஆலோசனை செய்யப்பட்டதுதானென்றி திட்டவட்டமான முடிவு எதுவும் செய்யப்படவில்லை என்று அந்த அதிகாரி கூறினர்.

## ஈவியன் மகாநாடு

### தேசியத் தலைவர்கள் பரிசீலனை

லண்டன், ஜூன் 20

அல்ஜீரியாவின் சுதந்திரம் பற்றி ஈவியன் நகரில் அல்ஜீரியத் தேசியத் தலைவர்களுக்கும் பிரெஞ்சு அரசாங்கப் பிரதிநிதிகளுக்குமிடையில் நடைபெற்று வந்த பேச்சுவார்த்தை திடீரென்று நிறுத்திவைக்கப்பட்டபின் உள்ள நிலைமைபற்றி டூனிசில் அல்ஜீரிய தேசிய அரசாங்கத் தலைவர்கள் கூடி ஆராய்கின்றனர்.

# ஐ. நா. படையின் நைஜீரிய துருப்புக்கள்

## மட்டாடித் துறைமுகப் பிரதேசத்துக்குச் செல்ல தடை

லியப்போல்ட்வில்லி ஜூன் 20

காங்கோவிலுள்ள ஐ. நா. படையின் நைஜீரியத் துருப்புக்கள் மட்டாடித்துறைமுகப் பிரதேசத்தில் செல்வதற்கு இன்னும் அனுமதிக்கப்படவில்லை.

மட்டாடித் துறைமுகத்தில் முன்பு தங்கியிருந்த ஐ. நா. துருப்புக்களுக்கும் காங்கோலியத் துருப்புக்களுக்குமிடையில் கைகலப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து அங்கிருந்த ஐ.நா. துருப்புக்கள் வெளியேற்றப்பட்டன.

சமீபத்தில் ஐ. நா. படைகளுக்கும் லியப்போல்ட்வில்லி அரசாங்கத்துக்கும் ஏற்பட்ட ஒரு உடன்படிக்கையைத் தொடர்ந்து மட்டாடித்துறைமுகத்துக்கு ஐ. நா. படைகள் மீண்டும் சென்று தங்குவதற்கு அனுமதியளிக்கப்பட்டது.

ஐ. நா. படையைச் சேர்ந்த நைஜீரிய அணியின் துருப்புக்கள் நேற்று மட்டாடித்துறைமுகத்துக்கு லியப்போல்ட்வில்லியிலிருந்து ஒரு விசேஷ ரயிலில் புறப்பட்டுச் சென்றனர். இந்த ரயிலை லியப்போல்ட்வில்லி அரசாங்கத்துருப்புக்கள் இடையில் மறித்து சுமார் மூன்றுமணி நேரம் சோதனை செய்தனர். பின்னர் நைஜீரியத் துருப்புக்கள் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டபோதிலும் துறைமுகப் பிரதேசத்துக்குள் செல்வதற்கு அவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

நைஜீரியத் துருப்புக்கள் லியப்போல்ட்வில்லியிலுள்ள ஐ. நா. தலைமைக் காரியாலயத்துடன் ரேடியோத் தொடர்பு கொள்ளவும்முடியாது போய் விட்டது.

மட்டாடித் துறைமுகத்தில் ஐ. நா. துருப்புக்களின் சாதனங்களும் பொருள்களும் இன்னும் இருக்கின்றன.

## அல்ஜீரியாவில் மீண்டும் கலகம்

லண்டன், ஜூன் 20

அல்ஜீரியாவில் தேசியவாதிகளின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

தேசியவாதிகள் நேற்று மறைமுகமாக நடத்திய தாக்குதலில் ஒரு ஐரோப்பியரும் ஒரு முஸ்லிம் பெண்ணும் நான்கு முஸ்லிம்களும் நான்கு பிரெஞ்சுக்காரரும் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

### 11 பேர் கொலை

அல்ஜீரியாவில் தேசியவாதிகள் கலகம் செய்ததை அடக்குவதற்கு பிரெஞ்சு துருப்புக்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 11 பேர் கொல்லப்பட்டனர். 20 பேர் காயமடைந்தனர்.

## உச்சி மகாநாட்டில் திரு. நேரு கலந்து கொள்வார்?

புதுடில்லி, ஜூன் 20

யூகோஸ்லாவியாவில் செப்டம்பர் மாதம் முதல்த் திகதியில் நடைபெறவிருக்கும் உச்சி மகாநாட்டில், தாம் கலந்து கொள்வது பற்றி இன்னும் தீர்மானிக்கவில்லை என்று பாரதப் பிரதமர் திரு. நேரு தெரிவித்துள்ளார்.

இந்த மகாநாட்டில் எந்த வல்லரசு முகாம்களுடனும் சேராத 21 நாடுகள் பங்கு பற்றும் எனத் தெரிகிறது.

குழுப் பள்ளத்தாக்கில் பத்து நாள் ஓய்வைக் கழித்து விட்டு புதுடில்லி திரும்பிய திரு. நேரு, பத்திரிகை நிருபர்களுக்களித்த பேட்டியின் போது உச்சி மகாநாட்டில் கலந்து கொள்வது பற்றி இன்னும் தாம் தீர்மானிக்கவில்லையென்றும், அனேகமாக அதில் தாம் பங்குபற்றலாம் என்றும் கூறினர்.

லாவோஸ்:

# முத்தரப்பு தலைவர்கள் உடன்பாடு

ஜெனிவா, ஜூன் 20

லாவோஸ் பிரச்சினைக்கு ஒரு தீர்வுகாணுமுகமாக ஜெனிவாவிலும், சூரிச்சிலும், நாமோனிலும் முயற்சி நடைபெற்று வருகின்றன.

லாவோசுக்கான 14 நாடுகளைக் கொண்ட சர்வதேசக் கமிஷனின் மகாநாடு ஜெனிவாவில் நடைபெறுகிறது. லாவோசின் வலதுசாரி, இடதுசாரி, நடுநிலை ஆகிய முத்தரப்புத் தலைவர்களும் சுவிட்சர்லாந்தில் சூரிச் என்ற நகரில் கூடி லாவோசில் ஒரு கலப்பு அரசாங்கம் அமைப்பது பற்றி பேச்சுவார்த்தை நடத்திவருகின்றனர். முத்தரப்புத் தலைவர்களும் இன்று இரண்டாவது தடவையாகக் கூடுகின்றனர்.

லாவோஸ் சண்டை நிறுத்தம் பற்றி லாவோசில் முத்தரப்பு பிரதிநிதிகள் நாமோன் என்ற இடத்தில் கூடி ஆராய்ந்து வருகின்றனர்.

### உபகுழு நியமனம்

லாவோசில் கலப்பு அரசாங்கம் அமைக்கப்பட்டதும் அது பின்பற்றவேண்டிய உள்நாட்டுக் கொள்கைகள் பற்றி ஆலோசனை செய்வதற்கு சூரிச் நகரில் கூடிய லாவோசின் முத்தரப்புத் தலைவர்கள் ஒரு செயற் குழுவை நியமித்துள்ளனர்.

லாவோசின் வலது சாரிப் பிரிவுத் தலைவர் இளவரசர் பூன் ஊம், இடதுசாரித் தலைவர் இளவரசர் சொவன்னுவாடங், நடுநிலைமைத் தலைவர் இளவரசர் சுவன்னபூமா ஆகிய மூவரும் முதல் தடவையாக சந்தித்துப் பேசியதில் அவர்களுக்கிடையில் பல விஷயங்களில் உடன்பாடு ஏற்பட்டுள்ளதாக வலதுசாரி அரசாங்கத்தில் வெளிவிவகார மந்திரியாக இருந்த ஜெனரல் பூமி நொசாவான் தெரிவித்தார்.

சுதந்திர நடுநிலை லாவோசை அமைப்பதில் சூரிச் மகாநாட்டில் உடன்பாடு ஏற்படுவதற்கான வாய்ப்புக்களிருப்பதாக நடுநிலைத் தலைவர் இளவரசர் சுவன்னபூமா கூறினர்.

முத்தரப்பினருக்குமிடையில் லாவோசின் உள்நாட்டுக் கொள்கை பற்றி முடிவு ஏற்பட்டுவிட்டதென்றும் வெளிவிவகாரக் கொள்கை சம்பந்தமாக கஷ்டம் ஏதுமிருக்குமென்று தாம் கருதவில்லையென்றும் இளவரசர் சுவன்னபூமா தெரிவித்தார்.

நடுநிலைமை, சுதந்திரம், சமாதான சகவாழ்வு ஆகியவைதான் லாவோசுக்கு வேண்டியனவென்று இளவரசர் சுவன்னபூமா கூறினர்.

எல்லா நாடுகளுடனும் முதலில் அண்டைநாடுகளுடன் உறவுகொண்டிருத்தல், நேர்முகமான நிபந்தனையற்ற பொருளுதவி பெறுதல் ஆகியவைகளில் முத்தரப்புத் தலைவர்களுக்கிடையிலும் உடன்பாடு ஏற்பட்டுவிட்டதாகவும் லாவோசில் அந்நியதளங்களிருப்பது பற்றித்தான் கருத்து வேற்றுமை ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

## முகர்ஜி காலமானர்

கல்கத்தா, ஜூன் 20

பாரத கிறிக்கட் மேற்பார்வைச்சபைக்கு இரண்டுதடவை தலைவராகப் பணியாற்றிய திரு. ஜே. ஸி. முகர்ஜி இன்று கல்கத்தாவில் காலமானர். அவருக்கு வயது 80.

## வாஷிங்டனில் ஜப்பான் பிரதமர்

லொஸ்ஏன்ஜலஸ், ஜூன் 20

ஜப்பான்பிரதம மந்திரி திரு. இக்கேடா வாஷிங்டன் செல்லும் வழியில் நேற்று இங்கு வந்து சேர்ந்தார். திரு. இக்கேடாவுடன் திருமதி இக்கேடா, ஜப்பான் வெளிவிவகார மந்திரி மற்றும் ஜப்பான் பார்லிமெண்டின் மேல்சபை அங்கத்தவர் இருவர் ஆகியோர் வந்து சேர்ந்தனர்.

அமெரிக்க ஜனாதிபதியுடன் நட்புறவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காகத் தாம் வாஷிங்டன் செல்வதாக திரு. இக்கேடா கூறினர்.

புதன்கிழமை பிரதமர் இக்கேடாவுக்கு அளிக்கப்படவிருக்கும் விருந்துபசாரத்தில் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி திரு. ஐஸனோவரும் திருமதி ஐஸனோவரும் கலந்துகொள்வார்கள்.

திரு. இக்கேடா இன்று செவ்வாய்க்கிழமை வாஷிங்டன் போய்ச் சேர்வார்.

## அங்கோலாவில் மீண்டும் தேசியவாதிகள் தாக்குதல்

லிஸ்பென், ஜூன் 20

அங்கோலாவில் அன்றிக் என்னும் கிராமத்தின் வடபகுதி தேசிய வாதிகள் நேற்று நடத்திய தாக்குதலில் பலர் கொல்லப்பட்டதாகவும் பெருந்தொகையானோர் காயப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

மத்திய மின்சார நிலையத்திற்கு கலகக்காரர்கள் தீ வைக்க முயன்றதாகவும் இவர்களைப் போர்ச்சுக்கல் துருப்புக்கள் மூன்றுமணி நேரம் எதிர்த்துப் போராடி விரட்டியடித்ததாகவும் போர்ச்சுக்கல் செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

போர்ச்சுக்கல் படையினருக்கும் கலகக்காரருக்கும் இடையில் ஏற்பட்ட கைகலப்பில் இருபகுதியினருக்கும் பலத்த சேதம் ஏற்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

வடக்கு அன்றிக் பகுதியில் உள்ள விவசாயப்பண்ணைகளுக்குள் கலகக்காரர்கள் நுழைந்து சேதம் விளைவித்ததுடன் கிராமங்களுக்குள் புகுந்துகொள்ளை அடித்ததாகவும், வீடுகளுக்குத் தீ வைத்ததாகவும் போர்ச்சுக்கல் செய்திஸ்தாபனம் அறிவித்தது.

### மணிவாக்கு

உள்ளத்தில் அன்பு இருந்தால் மட்டும் போதாது. அந்த அன்பு செயலிற் பயன் தருமாறு நடந்து கொள்வதே அவசியமாகும். —விநோபாஜி

ஈழநாடு
EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு
ஆனி மீ 7உ (21-6-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389.

## சமூக அநியாயம்

இலங்கையிலே மணமாகாத தாய்மார்கள் ஒருலட்சத்துக்கு அதிகமானவர்கள் இருக்கிறார்களாம். அவர்கள் தாங்கள் பெற்றெடுத்த குழந்தைகளை ஆஸ்பத்திரியிலேயே விட்டுவிட்டோ, அல்லது பிச்சைக்காரருக்கு விற்றோ, இன்றேல் அனாதைமடங்களில் சேர்த்தோ விடுவதாயும், சிலர் அக்குழந்தைகளை தாங்கள் வளர்ப்பதாகக் கூறி, வீட்டில் அடிமைகளாக வேலைசெய்ய வைத்துக் கொள்வதாகவும் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள ஓர் அறிக்கை தெரிவித்தது. சென்ற வாரம் 'ஈழநாடு' பத்திரிகையில் இச்செய்தி வெளியானதைப் பார்த்த ஒரு தமிழ்த் தாய் பதறிப்போய் "இதற்கு ஏதும் செய்ய முடியாதா! அத்தாய்களையும் குழந்தைகளையும் காப்பாற்ற என்ன செய்யலாம்?" என்று கவலையுடன் எழுதிக் கேட்டுள்ளார்.

சமூக சேவா மன்றங்கள் இத்தகைய திருமணமாகாத தாய்மார்களுக்குப் புனர்வாழ்வு அளிக்க அதிகமான வசதி அளிக்கவேண்டுமென்று அதே அறிக்கை தெரிவிக்கின்றது. கிறிஸ்தவ மிஷன்கள் சில தர்ம விடுதிகள் நடத்தி, இத்தகைய தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் சற்றே தஞ்சமளித்து, மேலானதோர் சமூக சேவையைச் செய்கின்றனர். ஆனால் இந்து சமூகத்தில் இவ்வித சமூக தர்மம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. தவறிய பெண்களின் வாழ்விலே இடிவிழுந்து, அவர்கள் வாழ்வே அடியோடு குட்டிச்சுவராகி விடுகிறது. சிலர் இனி இவ்வுலகிலே தங்களுக்கு வாழ இடமில்லை என்று தற்கொலையும் செய்துகொள்ளுகின்றார்கள். இது பெரிய பாவம். ஆண்கள் தவறி நடந்தால் கேள்வி முறை எதுவுமில்லை. சமூகத்தில் கௌரவமாக வாழலாம். ஆனால் பெண்கள் தவறிவிட்டால் அதோ கதிதான்! இது பெரிய சமூக அநியாயமல்லவா?

இப்பெண்கள் விஷயம் ஒருபுறமிருக்க, ஒரு பாவமுமறியாத அக்குழந்தைகளின் கதி மிகப் பரிதாபமாகும். பிச்சைக்காரர்களாகவோ, அடிமைகளாகவோ, அல்லது கிரிமினல் குற்றவாளிகளாகவோ அவர்களை இன்றைய சமூகம் ஆக்குகின்றது! இதனால் சமூகத்துக்குப் பலவித கேடுகள் ஏற்படுகின்றன. சமூகத்தின் மேலான நன்மையை முன்னிட்டாவது அக்குழந்தைகளைக் காப்பாற்றி நல்ல பிரஜைகளாக்கவேண்டும். குழந்தை பாதுகாப்பு இலாகா உதவிக் கமிஷனர் திரு. தேவேந்திரா இதுபற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில், இதற்காக அதிக பணம் ஒதுக்கப்படவேண்டுமென்றும், பொருளாதார அபிவிருத்திக்குச் செலவிடுவதைப் போலவே, மனித உயிர்களைக் காப்பதும் முக்கியமென்றும் உருக்கமாகக் கூறுகின்றார்.

இந்த சமூகக் குறையைத் தீர்க்க அரசாங்கத்தையேநம்பியிராமல், சமூகத்திலுள்ள ஆண், பெண் பிரமுகர்கள் முன்வந்து, இந்த தர்மத்தைச் செய்யவேண்டும். சென்னையிலே நீதி அரசராக இருந்த வேங்கட சுப்பராவும் அவர் மனைவியாரும் சேவாசதனம் அமைத்து, பல நூறு பெண்களுக்கு புதுவாழ்வு அளித்துக் காத்துள்ளனர். டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி, ஒளவை இல்லம் அமைத்து இதே தர்மம் செய்துள்ளார். இந்த முன்மாதிரியைப் பின்பற்றி, இங்கும் அவ்வித ஸ்தாபனங்கள் அமைத்து, பல உயிர்களைக் காக்கக்கூடிய மேலான புண்ணியத்தைச் செய்பவர்கள் யாருமில்லையா? தெய்வமே! கோவில்களின் ஆதரவிலே இவ்வித தர்மஸ்தாபனங்களை அமைத்து நடத்துவது மிகப் பொருத்தமானதுடன் மேலான பலனுமளிக்கும்.

# இலங்கையின் பொருள் வளத்தை பல வழிகளிலும் முதலீடு செய்யவேண்டும்

## நாட்டின் அபிவிருத்திக்கு வழி

—ம. சத்தியமூர்த்தி—

**இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த போதிலும் பொருளாதாரத் துறையில் அது இன்னும் விருத்தியடையவில்லை. நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளும் அவற்றின் தன்மைகளும் இக் கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளன.**

அன்னியராட்சிக்குட்பட்டிருந்த இலங்கை 13 ஆண்டுகளுக்கு முன்னர் சுதந்திரம் பெற்றது. சுதந்திரப்பாதையில் சென்று பொருளாதார சுபிட்சத்தைப் பெறலாம் என மக்கள் அவாவுற்றனர். ஆனால் சுதந்திர இலங்கையின் தலைவர்கள், பல அரசியல் பொருளாதார, சமூகப்பிரச்சினைகளை எதிர் நோக்கிச் செல்லவேண்டியிருந்தது. நமது பொருளாதாரப் பிரச்சினைகளை ஆராய்வதற்கு முன்னர், இலங்கையின் பொருளாதாரத் தன்மையை ஆராய்வது பொருத்தமாகும். அப்பொழுதுதான் நமது பொருளாதாரப் பிரச்சினைகளை நன்கு விளங்கிக் கொள்ள ஏதுவாகும்.

குடியேற்ற நாட்டுப் பொருளாதாரத்தை தேசியப்பொருளாதாரமாக மாற்றவேண்டியதே நாட்டின் தலையாய கடமையாக இருக்கின்றது. இலங்கை சுதந்திர நாடாகக் கடந்த பன்னிரண்டு வருடகாலம் இருந்தபோதும், எதிர்பார்த்த அளவுக்கோ அல்லது முன்னேறக்கூடிய அளவுக்கோ, நமது நாடு பொருளாதாரத் துறையில் முன்னேற்றமடையவில்லை என்பது மறுக்க முடியாத உண்மை. பின் தங்கிய நாடுகள் எனச் சொல்லப்படும் நாடுகளுக்குள் இலங்கையும் சேரும்.

### உயிர்நாடி

ரப்பர், தேயிலை, தென்னை ஆகிய வர்த்தகப் பயிர்களே இன்றும் நமது பொருளாதாரத்தின் உயிர் நாடியாக இருக்கின்றன. இப்பொருள்களை இலங்கை மாத்திரம் உற்பத்தி செய்யவில்லை. வேறு நாடுகளும் இலங்கையோடு உலகச் சந்தையில் போட்டி போடுகின்றன. சிறிய அளவில் இப்பயிர்களை உற்பத்தி செய்யும் இலங்கை மற்ற நாடுகளோடு போட்டி போடக்கூடிய நிலையில் இல்லை. சில நாடுகளில் செயற்கை ரப்பரை உற்பத்தி செய்கின்றார்கள். யுத்தகாலத்தில் மாத்திரமே ரப்பரின் விலை உயர்கின்றது. இலங்கையின் பெருமளவு வருவாய் இப்பொருள்களை ஏற்றுமதி செய்வதின் மூலம் கிடைத்தாலும் இவற்றை மாத்திரம் நாம் நம்பியிருக்க முடியாது.

சாதாரணமாக பணம் படைத்த தனி மனிதர்கள் மிகவும் புத்திசாலித்தனமாக நடந்து கொள்வதை நாம் பார்க்கின்றோம். தனியாக ஒரு வியாபாரத்தில் பணத்தை முதலீடு செய்யாது, பல துறைகளில் அவர்கள் முதலீடு செய்வார்கள். உதாரணமாகப் பணம் படைத்த ஒருவர் வியாபாரத்திலும், விவசாயத்திலும், வாடகை வீடுகள் கட்டுவதிலும், பங்குகள் வாங்குவதிலும் தமது பணத்தை முதலீடு செய்கின்றார். இதனால் ஒரு துறையில் நட்டம் ஏற்பட்டாலும் அவரது பொருளாதார நிலை பாதிக்கப்படுவதில்லை. அதேபோல இலங்கையின் பொருள் வளத்தைப் பல வழிகளிலும் முதலீடு செய்ய வேண்டும்.

### பெருமை கொள்ளலாமா?

இலங்கை ஒரு விவசாய நாடு எனக் கூறப்படுகின்றது. விவசாயமே இலங்கை மக்களின் முக்கிய தொழிலாக இருக்கின்றது. ஆனால் நமக்கு வேண்டிய உணவு, உடை, அத்தியாவசியப் பொருள்கள் ஆகியவற்றின் பெரும்பகுதியை பிறநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொண்டேயிருக்கின்றோம். இந்நிலையில் நமது நாடு விவசாய நாடு என பெருமை கொள்ள இடமுண்டா?

பெரும்பாலான மக்கள் விவசாயத் தொழிலைச் செய்தும், அத்தொழில் பூரண நிலையை அடையவில்லை. பூரண நிலையை அடைவது சாத்தியமில்லாவிட்டாலும், முற்போக்குக்கான அறிகுறிகளும் அதிகம் தென்படவில்லை. எனினும், சுதந்திரம் அடைந்த பின் குடியேற்றத் திட்டங்கள், விவசாயத் திட்டங்கள் முதலியவற்றை நடைமுறைக்குக் கொண்டுவந்து, அரசாங்கத்தினர் ஊக்கமளித்திருக்கின்றனர். இதைப்போன்ற நூற்றுக்கணக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுச் செயலாற்றப்படவேண்டும். சாகுபடி செய்யப்படும் நிலங்களில் நவீன முறைகளைக் கையாண்டு உற்பத்தியைப் பெருக்க வேண்டும். சாகுபடி செய்யாமல் இருக்கும் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலத்தைச் சாகுபடி செய்யவேண்டும். மற்றும் இயற்கை வளங்களையும் பொருளாதார உற்பத்திக்குப் பயன்படுத்த வேண்டும். இந்த வழிகளிலே விவசாயத்தை விருத்தி செய்ய முயலவேண்டும்.

### அன்னியர் ஆட்சியில்

அன்னியருடைய ஆட்சிக்காலத்தில் இந்நாட்டின் பொருளாதார விருத்திக்கான திட்டங்கள் வகுக்கப்படவில்லை. ரப்பர், தேயிலைத் தோட்டங்களைத் தொடங்கியதும், போக்குவரத்துச் சாதனங்கள் அமைக்கப்பட்டதும் பிரித்தானியரது வசதிக்கும், லாபத்துக்குமேயாகும். எனினும், இவற்றால் இலங்கை மக்களுக்கு சில நன்மைகளும் உண்டாயின. ஆனால் இந்நாட்டிலிருந்து செல்வத்தைச் சுரண்டித் தமது நாட்டுக்குக் கொண்டு செல்வதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்தனர். ஆங்கிலேயரது ஆட்சியால் ஏற்பட்ட நன்மைகளை விட, நமது பொருளாதாரத்துக்கு ஏற்பட்ட சேதமே கூடுதலாக இருக்கின்றது.

இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட ரப்பர் இங்கிலாந்துக்குச் சென்று பொம்மைகள், விளையாட்டுச் சாமான்கள், டயர், ஆகிய உருவங்களைப்பெற்று எம்மிடமே திரும்பி வந்தன. இவற்றை விலைகொடுத்து நாம் வாங்கினோம். அதாவது இங்கிருந்து ஏற்றுமதி செய்த செலவு, இங்கிலாந்தில் வேலை செய்யும் தொழிலாளர்களது சம்பளம், வரிகள், இறக்குமதிச் செலவு முதலியவை இலங்கை மக்கள்மீது சுமத்தப்பட்டன. சுதந்திரமடைந்த பிற்பாடும் இந்நிலை நீடித்திருக்கின்றது என்பதை நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

### வாய்ப்பு ஏற்படவில்லை

இங்கிலாந்தில் கைத்தொழிற் புரட்சி ஏற்பட்ட பின்னர் பெருமளவில் பொருள்கள் உற்பத்தியாயின. இப்பொருள்கள் இங்கிலாந்து தேசத்து மக்களின் தேவைக்கு மேலதிகமாக இருந்தன. எனவே, குடியேற்ற நாடுகள் இப்பொருள்களுக்கு சந்தைகளாயின. இக்காரணத்திற்காகவே ஆங்கிலேயர் குடியேற்ற நாடுகளில் கைத்தொழில்கள் விருத்தியடைவதை விரும்பவில்லை. நமக்குத் தேவையான மூலப்பொருள்களை மாத்திரம் உற்பத்தி செய்வதற்கு வசதிகள் செய்துகொடுத்தனர். ஆகையால் இலங்கை போன்ற நாடுகள் மூலப் பொருள்களை இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யும் நாடுகளாகவும், இங்கிலாந்தில் உற்பத்தி செய்த பொருள்களுக்கு ஏற்ற சந்தைகளாகவும் இருந்தன. ஆட்சியாளர் கடைப்பிடித்த கொள்கையின் காரணமாக கைத்தொழில்கள் வளர்ச்சியடையக் கூடிய வாய்ப்பேற்படவில்லை.

### விடுதலையடையவில்லை

அன்னியராட்சியினின்றும்விடுதலையடைந்த நம் நாட்டு மக்கள் அன்னிய கலாச்சார மோகத்தினின்றும் விடுதலையடையவில்லை. இந்த மோகமும் நமது பொருளாதாரத்தைப் பாதிப்பதால்தான் இதைப்பற்றி இங்கு குறிப்பிடவேண்டியிருக்கின்றது. இதன் காரணமாக விலையுயர்ந்த, அவசியமற்ற பொருள்கள் பல இறக்குமதியாகின்றன. மோட்டார் வண்டிகள் வைத்து இலங்கையில் உல்லாச பவனி வருவோரின் எண்ணிக்கை பற்றிப் பெருமைப்படும் நாம் வேலையில்லாது கஷ்டப்படும் மக்களின் தொகையையும் எண்ணிப் பார்க்கவேண்டும். மேல்நாட்டு நாகரிக மோகம் பெருந்தொகையான பணத்தை வெளிநாடுகளுக்கு அனுப்புகின்றது. எனவே, இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் நல்ல முறையில் கட்டுப்படுத்தப்படல் வேண்டும்.

இலங்கையானது அளவிற் சிறிய நாடாக இருப்பதால், இயற்கைவளமும் குறிப்பிட்ட அளவே இருக்கின்றது. சனத்தொகை பெருகி 100லட்சத்தை எட்டிப்பிடித்து விட்டது. இந்நிலையில் பிரச்சினைகளும் பன்மடங்குகள் பெருகுகின்றன. அரசியல் சமூக அமைப்புக்கள் மாத்திரமன்றி, பொருளாதார அமைப்பும் மாற்றியமைக்கப்படல் வேண்டும்.

எமது இன்றைய பொருளாதார அமைப்பு சிறு தொகையினருக்கு மிதமிஞ்சிய வசதிகளையும், மற்றையோருக்குக் குறைவான வசதிகளையும் கொடுத்துள்ளது. நாட்டின் செல்வத்

(8ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

அன்று ஆவணி அவிட்டம். ஒரு பிராமணர், காலையிலே, "காமோகாரிஷீத், மன்யு ரகாரிஷீத் நமோநம" என்று 108 தரம் ஜபம் செய்துகொண்டிருந்தார். ஜபம் முடிந்ததும் அந்த மந்திரத்தின் கருத்து என்ன? என்று அவரைக் கேட்டேன்.

அவர் என்ன சொன்னர் தெரியுமா? "காமோகாரிஷி என்றும் மன்யுர்காரிஷி என்றும் இரு பெரிய ரிஷிகள் இருந்துவந்தனர். ஆவணி அவிட்டத்தன்று அந்த இரண்டு ரிஷிகளின் பெயர்களையும் சொல்லி, நமோ நம என்று அவர்களை வணங்கவேண்டும்" என்றார். இதைக் கேட்டதும் சிரிப்பு ஒருபக்கம், வருத்தமொருபக்கம். பல வருடங்களாகியும் இதை மறக்க முடியவில்லை.

* * *

அந்த மந்திரத்தின் கருத்து என்ன தெரியுமா? காமம் என்றால் ஆசை, மன்யு என்றால் கோபம். "காமமும், கோபமும் தான் என் தவறுகளுக்குக் காரணம். வணக்கம், வணக்கம்" என்று சொல்லி பாவ மன்னிப்புக்கேட்கும் அருமையான மந்திரம் அது.

இதை தினசரி மூன்று வேளை சந்தியாவந்தனத்தின் போதும் மூன்றுமுறை கூறி வணங்கி மனதைத் தூய்மையாக்கவேண்டுமென்பதே அதன் நோக்கம். உண்மை அப்படி இருக்க, அர்த்தத்தை அனர்த்தம் செய்து, மந்திரத்தை உளறிக் கொட்டினால் என்ன பலன் கிடைக்கும்? அதில் நமக்குச் சிரத்தை எப்படி ஏற்படும்?

சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்ல வேண்டுமென்கிறார் மாணிக்கவாசகப் பெருந்தகை சிவபுராணத்தில். மந்திரங்களையும் பொருள் உணர்ந்தே சொல்லவேண்டும். இக்காலத்தில் சமஸ்கிருதப் படிப்பு இல்லாததால், சமஸ்கிருத மந்திரங்களுக்கு, அர்த்தம் புரிவதில்லை. அர்த்தம் புரியாததால் அதன் பலனை உணராமல், பலர் சந்தியாவந்தனமே செய்வதும்கிடையாது.

* * *

இக் குறையை உணர்ந்த, பிரம்மஸ்ரீ அச்சுவேலி குமாரசாமிக் குருக்கள் அவர்கள் சந்தியாவந்தனத்துக்கு, அருமையான பொருள் எழுதி புத்தகமாக வெளியிட்டு பெரும் உபகாரம் செய்திருக்கிறார். சந்தியாவந்தனத்துக்கு, தமிழ் நாட்டில் சிலர் தமிழ்க்கருத்து எழுதி வெளியிட்டிருக்கிறார்கள் தான். ஆனால் குருக்களவர்கள் எழுதியுள்ள அர்த்தம், மிக அபூர்வமாகவும், ஆராய்ச்சி மிக்கதாகவுமுள்ளது.

குருக்களவர்களுக்கு சென்ற ஆண்டு வண்ணை வைத்தீச்வர வித்யாலயத்தில் மணி விழா நடத்தி, ஒரு பணமுடிப்பு அளித்தனரல்லவா? அப்பணத்தை அவர் தமக்குப் பயன்படுத்தாமல், இந்நூலை எழுதி வெளியிட்டிருக்கின்றார்! நல்ல புண்ணியம்!

மூலம் தமிழிலும் இருப்பின் பலருக்கும் இது அதிகம் பயன்படலாம். அடுத்த பதிப்பு அவ்விதம் வெளியானால் மிக நல்லது. பொருளறிந்து சந்தியாவந்தனம் செய்து பயன்பெற இந்நூல் பெரிதும் உதவும்.

* * *

யூ. என். பி. தலைவர் திரு. டட்லிசேனநாயக்கா தமது 50வது ஜயந்தியை, கதிர்காமத்தில் கொண்டாடியுள்ளார். ஐம்பதுக்கு மேல் வாழ்க்கையில் ஒரு திருப்பம் வருமென்பர். அவர் இனியாவது, வெறும் சிங்களத் தலைவராக இல்லாமல், தேசியத் தலைவராக, அரசியல் ஞானியாக விளங்குவாராயின், நாடு நலம் பெறலாம். கதிர்காம முருகன் அதற்கு அருள் செய்வாராக!

# சம்பள அறிக்கை தாமதம்: அரசாங்க சிப்பந்திகள் அதிருப்தி

## நிதிமந்திரிக்கு தொழிற் சங்கம் எழுதியுள்ள கடிதம்

கொழும்பு, செவ்வாய்

சம்பள அறிக்கையை வெளியிடாமல் இன்னும் கால தாமதம் செய்யப்படுவதால், அரசாங்க சேவையாளர் அனைவரும் மனமுடைந்துள்ளதாயும், அந்த அறிக்கை சிபார்சுகள் அமுலுக்கு வருமா? என்பதே சந்தேகப்படும்படியாக இருப்பதாயும், அரசாங்க ஊழியர் தொழிற்சங்க சம்மேளனம், நிதிஅமைச்சருக்கு எழுதியுள்ள ஓர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

"சம்பளக் கமிஷனின் அறிக்கையை வெளியிடாமல் இன்னும் அதிக தாமதப்படுத்தினல், அரசாங்க சிப்பந்திகளிடையே பரவியுள்ள அதிருப்தி மேலும் அதிகரிக்கும்."

# ஓவர்ஸியர்முறையையொழிக்க அரசாங்கம் முடிவு

## என்ஜினியர்கள் மகாநாட்டில் மந்திரி அறிவிப்பு

**கொழும்பு, புதன்**

**ஓவர்ஸியர் முறையை ஒழித்துவிட்டு, இது சம்பந்தமான பொறுப்புகளை கூட்டுறவுச் சங்கங்கள், கிராமாபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றிடம் ஒப்படைக்க அரசாங்கம் எண்ணியிருப்பதாக போக்குவரத்து மந்திரி திரு. கலுகல்ல அறிவித்தார்.**

போக்குவரத்து, பொது வேலைப்பகுதி என்ஜினியர்களின் வருடாந்த மகாநாட்டில் பேசிய மந்திரி, காலக்கிரமத்தில். ஓவர்ஸியர்களின் கடமைகள் இச்சங்கங்களிடம் ஒப்படைக்கப்படும் என்று கூறினர்.

"இக்கடமைகளைச் செய்வதில் கூட்டுறவு, கிராமாபிவிருத்திச் சங்கங்களுக்கு உதவியளிக்க அரசாங்கம் முடிவுசெய்திருக்கிறது. ஓவர்ஸியர்களின் தொடர்ந்த அதிருப்தியின் காரணமாகவே இவ்விதம் முடிவு செய்யப்பட்டது. அவர்கள் தனிப்பட்ட முறையில் பெரும்பாலான நேரம் வேலை செய்கிறார்களே தவிர பொது வேலையில் முழுநேரம் செயலாற்றுகிறார்களில்லை.

என்ஜினியர்கள் மராமத்து இலாகா வேலைகளைச் செய்வதில் தங்கள் திறமையையும், ஒத்துழைப்பையும் நன்கு பயன்படுத்த வேண்டும்" என்றும் ஓவர்ஸியர்களின் வேலைகள் பற்றி பொதுமக்கமந்திரி கூறினர்.

# வல்வெட்டித்துறை

1-ம் பக்கத் தொடர்ச்சி

டர்பான முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது. சமீபத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளை பிரதமர் சந்தித்து இவ்விஷயம்பற்றிப் பேசினர். இப்பிரச்சினையைத் தீர்க்க எல்லா வழிகளிலும் முயற்சிசெய்யப்படும்."

அவசரகாலச் சட்டத்தை ஜூன் 17ம் தேதிமுதல் மேலும் ஒருமாதம் நீடிக்கும் தேசாதிபதியின் கட்டளையை செனட் சபைத் தலைவர் திரு சிரில் டி' சொய்ஸா வாசித்தார்.

### செனட்டர் நடேசன் புகார்

செனட்டர் நடேசன் அவசர கால நிலைமைபற்றிக் கூறியதாவது:-

அவசரகால அதிகாரத்தின்படி மொத்தம் 72 பேர் சிறைப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அவர்களை ஏன் இன்னும் விசாரணையில்லாமல் சிறைப்படுத்தி வைக்கவேண்டும்?

வல்வெட்டித் துறையிலே 28 பேர்களைக் கைது செய்து அனுராதபுரம் சிறையில் விசாரணையின்றி வைத்துள்ளதாகத் தெரிகிறது. கள்ளக்கடத்தலில் ஈடுபட்டுள்ளவர்களென்றும், தென்னிந்தியாவிலிருந்து ஆயுதங்களைக் கடத்தமுயலுவதாகவும் கூறி, வல்வெட்டித்துறைப் பட்டினசபைத் தலைவர் கூட விசாரணையின்றி சிறைப் படுத்தப் பட்டுள்ளதாகத்தெரிகிறது. தென்னிந்தியாவிலே வெங்காயமும், மிளகாயும்தானுள்ளது. அதைத்தான் கடத்தமுடியுமேயன்றி ஆயுதங்களை யல்ல.

முப்படைகளும் வடக்கு மாகாணத்தில் இருப்பதால் அவர்கள் கள்ளக்கடத்தலைத் தடுக்கமுடியாதா? ஏன் பலரையும் விசாரணையின்றி இதற்காகச் சிறைப்படுத்தி வைக்க வேண்டும்?

**மன்னரில்**

இம்மாதம் 15-ந் திகதிமுதல் மன்னரில், கள்ளக்குடியேற்றத்தைத் தடுப்பதாகச் சொல்லி, இராணுவத்தினர் அட்டூழியங்களைச் செய்கின்றார்கள். இரவு 12 மணிக்குமேல், வீடுகளில் புகுந்து, தூங்குகிறவர்களை உதைத்து எழுப்பி "நீ கள்ளத்தோணி" என்று சொல்லி அடித்து பொலிஸ் ஸ்டேஷனுக்கு இழுத்துச் செல்லுகின்றனர். மற்றவர்கள் அடித்துத் துன்புறுத்தப்படுகிறார்கள். இராணுவத்தினர் இரவிலே எந்த வீட்டுக்குள்ளும் புகுந்து அட்டூழியம் செய்யாமல், மனிதாபிமானத்துடன் நடந்து கொள்ள முடியாதா என்று திரு. நடேசன் கேட்டார். மக்களின் பிரதிநிதிகளை இன்னும் எவ்வளவு காலம் விசாரணையின்றிச் சிறையில் வைத்திருக்க உத்தேசம்? என்றும் வினவினர்.

# யானைகளைப் பிடிக்கும் காட்சிகள்

## கலர் சினிமாப்படம் எடுக்க ஏற்பாடு

கொழும்பு, செவ்வாய்

துருதுஓயாவிலே யானைகளைப் பிடிக்கும் காட்சிகளை, அரசாங்க சினிமாப் பகுதியினர் கலர்ப் படமாகப் பிடிப்பார்கள். அந்தப் படங்கள், வெளிநாட்டு யாத்திரிகர்களை இங்கு வசீகரிப்பதற்காக பல தேச தலைமைப் பட்டணங்களிலும் காட்டப்பெறும்.

அங்கு பிடிபடும் யானைகள் எல்லாம் பின்னர், பாதுகாக்கப்பட்டுள்ள காட்டுப் பகுதியில் விடுவிக்கப்பெறும்.

# இந்தியச் செய்திகள்

இந்தியாவில் புதிய தொழில்களைத் துவங்க இந்தியா-அமெரிக்கா கூட்டு முறையில் தமிழ் நாட்டில் மோட்டார் வாகனங்கள், சைக்கிள்களின் டயர்களைத் தயாரிப்பதற்கு சென்னை ரப்பர் தொழிற்சாலை ஒன்றுக்கு ரூ. 5 லட்சம் கடன் கிடைத்திருக்கிறது.

∴ ∴ ∴

நியூஸிலாந்து உதவியுடன் உதகமண்டலத்தில் அரசாங்கத் துறையில் ஏற்படுத்தப்பட இருக்கும் குழைந்தை உணவு ஆலையில் இன்னும் 2 ஆண்டுகளுக்குள் உற்பத்தி ஆரம்பமாகலாம். இந்த ஆலையில் ஆரம்பத்தில் நாளொன்றுக்கு அரை டன் பால் பவுடர் தயராகும்.

∴ ∴ ∴

சேலம் மாவட்டத்தில் நிறுவப்பட இருக்கும் இரும்பு உருக்கு ஆலைக்காக மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 25 கோடி நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆலை நெய்வேலி நிலக்கரியை ஆதாரமாகக் கொண்டே நிறுவப்பட இருக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு 3 லட்சம் டன் தேனிரும்பு உற்பத்தி செய்ய முடியுமெனக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

∴ ∴ ∴

தமிழ் நாட்டிலுள்ள காவிரி நதி தீரத்தில் எந்தெந்த இடங்களில்தோண்டினல் எண்ணெய் கிடைக்கும் என்ற பூர்வாங்க ஆராய்ச்சி வேலைகள் யாவும் அநேகமாக முடிந்துவிட்டன என்றும், இந்த ஆண்டு இறுதிக்குள் பூமியில் துளையிட்டுக் குழாய்களை இறக்கி எண்ணெய் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சி வேலை துவங்கிவிடுமென்றும் அமைச்சர் மாளவியா தெரிவித்திருக்கிறார்.

∴ ∴ ∴

உதகையில் கச்சா பிலிம் உற்பத்தித் தொழிற்சாலை நிறுவ ஏற்பாடு செய்துள்ள இடத்தை மத்திய செய்தி ஒலிபரப்பு அமைச்சர் திரு. கேஸ்கர் பார்வையிட்டார்.

∴ ∴ ∴

மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ் நாட்டில் மீன் பாதுகாப்புக்காகப் பல்வேறு இடங்களில் ஒன்பது குளிர் பதன பாதுகாப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்படும் என்று தெரிகிறது.

# "பூந்தோட்டங்களை காய்கறித் தோட்டமாக மாற்றவேண்டும்"

கொழும்பு, செவ்வாய்

வீடுகளில் இருக்கும் பூந்தோட்டங்களையெல்லாம் காய்கறித் தோட்டங்களாக மாற்றுமாறு இலங்கையிலுள்ள சகல மக்களையும் காணி விவசாய நீர்ப்பாசன மந்திரி திரு. தென்னக்கூன் கேட்டுள்ளார்.

நேற்று அரசாங்க அலுவலகத்திலுள்ள மூன்ருவது மாடிக் கட்டடத்தில் நடைபெற்ற ஒரு விசேஷ வைபவத்தில் மந்திரி பூச்சாடிகளுள் காய்கறி விதைகளைப் போட்டு மேற்கண்டவாறு கூறினர்.

### பொதுத்தேர்தலில் ரேடியோ

கோவை, ஜூன் 20

அடுத்த பொதுத்தேர்தல்களின் போது அரசியல்கட்சிகளின் பிரசாரத்துக்காக அகில இந்திய ரேடியோவை உபயோகித்துக் கொள்வதைப் பற்றியவிஷயம் தேர்தல் கமிஷன் முடிவுக்கு விடப்பட்டுவிட்டது. இதில் சர்க்கார் குறுக்கிட விரும்பவில்லையென்று செய்தி ஒலிபரப்பு இலாகா மந்திரி டாக்டர் கேஸ்கர் கோவையில் கூறினர்.

# இலங்கையில் மாசி தயாரிக்க அனுமதி

## அரசாங்கத்திடம் ஜப்பான் கம்பனி கோரிக்கை

கொழும்பு, செவ்வாய்

நீர்ப்பாசன அமைச்சினல் இதுவரைஉபயோகிக்கப்பட்டு வந்த அரசாங்க அலுவலகக் கட்டடத்திலுள்ள மூன்ருவது மாடியில், மாசிக்கருவாடு தயாரிக்கும் உற்பத்திச் சாலையொன்றை நிறுவ ஒரு பெரிய ஜப்பான் ஸ்தாபனம் உணவு அமைச்சிடம் அனுமதி கோரியுள்ளது.

இவர்களுக்கு அனுமதி வழங்குவதற்கு முன் இது பற்றி ஆலோசனை நடத்த உணவு அமைச்சு ஒரு கமிட்டியை நியமித்துள்ளது.

மூன்று பேர் கொண்ட இந்தக் கமிட்டிக்கு உணவுக் கமிஷனர் திரு. ஆர். எல். அர்னேல்டா தலைமை தாங்குவார்.

இலங்கை இதுவரை 62,000 தொன் நிறையுள்ள மாசிக்கருவாட்டை 120 லட்சத்துக்கு வாங்கியுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

ஜப்பான் கம்பனியை இங்கு நிறுவ அனுமதிப்பதால் இலங்கை அரசாங்கம் வெளிநாட்டுச் செலாவணியைத் குறைக்க முடியுமா என்பது பற்றிக் கமிட்டி ஆராயும்.

# கதிர்காமத்தின் நிர்வாகத்துக்கு ஒரு பாதுகாப்புச் சபை

## பிரமத மந்திரிக்கு தேவாமிர்த சங்கம் மகஜர்

கதிர்காமம், செவ்வாய்

அனுராதபுரம் பாதுகாப்புச் சபை போன்ற ஒரு சபையை கதிர்காமத்திலும் ஏற்படுத்தி அச்சபையின் கீழ் கதிர்காமத்தின் நிர்வாகப் பொறுப்பைக் கொண்டுவர வேண்டுமென்று கதிர்காம மகா சேவா தேவாமிர்த சங்கம் பிரதம மந்திரிக்கு அனுப்பியுள்ள ஒருஅவசரக் கடிதம்கேட்டுள்ளது.

கதிர்காம தேவாலயத்தில் சமீப காலத்தில் நடைபெற்ற சம்பவங்கள் இதற்கான அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் நகர நிர்மாணத் திட்ட அமைப்பாளருக்கு இது சம்புந்தமாக வழங்கப்பட்டிருக்கும் அதிகாரம் கட்டுப்படுத்தப்படவேண்டும் என்றும் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

### ஆறு காரணங்கள்

ஸ்தலஸ்தாபன வீடமைப்பு மந்திரியின்கீழுள்ள கதிர்காம நிர்வாகத்தை கலாச்சார மந்திரியின்கீழ் கொண்டுவர வேண்டுமென்பதற்குரிய 6 காரணங்களை பிரதம மந்திரிக்கு சங்கத்தினர் தெளிவுபடுத்தியுள்ளனர்.

1. திட்டக் கமிட்டி கதிரமலையில் ஒரு கோவிலைக்கட்ட அனுமதியளித்துள்ளது. முன்னர் எந்தக்கோவிலும் இதில் அமைந்திருந்ததாக இப்போதிருக்கும் எந்த தஸ்தாவேஜுகளிலும் குறிப்பிடப்படவில்லை.

2. இதைக் கட்டுவதில் ஆர்வமுள்ள சிவில் சேர்விஸ் உத்தியோகஸ்தர் ஒருவரை திட்டக்கமிட்டி தமது கூட்டத்துக்கு அழைத்திருந்தது. ஆனல் தேவாமிர்த சங்கத்துக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை.

3. நகர நிர்மாணத் திட்ட அமைப்பாளர் இந்தக் கோவில் அமைப்புப் படத்தை அமைத்துக் கொடுத்தேதோடு பதுளையிலுள்ள ஸ்தலஸ்தாபன கமிஷனரிடம் இவ்வேலை துரிதப்படுத்தப்படவேண்டுமென கடிதம் எழுதியுள்ளார்.

4. திட்டக் கமிட்டி இங்கு பலகாலமாக இருந்துவரும் அபினவராமையா கட்டடத்தை இடித்துவிடத் தீர்மானித்துள்ளது.

5. பழைய மகாதேவாலயத்துக்கருகாமையில் கட்டப்பட்டிருக்கும் புதிய கோவில் மகாதேவாலயத்தை இரண்டாவது ஸ்தானத்துக்கு ஒதுக்கிவிட்டுள்ளது.

6. நூற்ருண்டுகளாக இருந்துவந்த சில கோவில்களை இடித்துவிட கமிட்டி தீர்மானித்துள்ளது.

# "என்ஜினியர்கள் மீது அரசாங்கம் நம்பிக்கை வைக்க வேண்டும்"

**—போக்குவரத்து மந்திரி**

கொழும்பு, செவ்வாய்

'இங்குள்ள என்ஜினியர்கள் மீது அரசாங்கம் நம்பிக்கை வைத்து அவர்களிடம் அதிக பொறுப்புகள்ஒப்படைக்கப்பட வேண்டும்.'

இவ்வாறு மராமத்து இலாகா என்ஜினியர்கள் சங்கத் தலைவர் திரு. எம். சந்திரசேன சங்கத்தின் வருடாந்த விருந்து வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

பிரதான விருந்தினராகக் கலந்துகொண்ட போக்குவரத்து மராமத்து மந்திரி திரு. பி.பி. ஜி. கலுகல்ல பேசியதாவது:

திட்டமிடப்படாத வேலையினலும் திறமையற்ற நிர்வாகத்தாலும் நாட்டின் நிதிநிலைமை சீர்குலைந்துள்ளது.

இலங்கையின் பெரும் பகுதி வருமானம் இலவசக் கல்விக்கும் சுகாதார சேவைக்கும் செலவிடப்படுவதால் அபிவிருத்தித் திட்டங்களுக்குப் போதியளவு பணம் செலவு செய்ய முடியாமலிருக்கிறது.

இலங்கையிலுள்ள ஒவ்வொருவரும் நாட்டின் தேவையை உணர்ந்து முன்னேற்றத்துக்காகப் பாடுபட வேண்டும். மொழி, சமயப் பிரச்சினைகள் இங்கிருக்கின்றன. ஆனல் அவை பெரிய பிரச்சினைகளல்ல. அவை தீர்க்கப்படலாம்.

இந்த நாடு எமக்குச் சொந்தமானதல்ல. ஒவ்வொரு நிமிடமும் நம் நாட்டின் அபிவிருத்திக்காக நாம் செலவு செய்ய வேண்டும். எம் நாடு அபிவிருத்தியடைந்துவிட்டால் எங்களுடைய துன்பங்களையும் வேற்றுமைகளையும் நாம் மறந்துவிடுவோம்.

# கரந்தன் சங்கக்கடையில் ரூ. 20000 பண மோசடி

## மானேஜர் தற்காலிகமாக வேலை நீக்கம்

நீர்வேலி, புதன்

இருபதினுயிரம் ரூபாய் பண மோசடி செய்ததாகச் சொல்லப்படும் நீர்வேலி கரந்தன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மானேஜரை அப்பதவிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

காசுப் புத்தகம் மறைக்கப்பட்டிருந்ததனுலும் முக்கிய சில தஸ்தாவேஜுகள் காணுமல் இருந்தாலும் இச் சங்கத்திலிருந்து எவ்வளவுபணம்மோசடி செய்யப்பட்டிருக்கின்றன. என்பதை திட்டவட்டமாகச் சொல்லமுடியாத நிலையில் இது விஷயம் துப்பறியும் பொலிசாரிடம் விடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

கடந்த சில மாதங்களாகச் செய்துகொண்ட பரிசீலனைகளின் விளைவால் ரூபாய் இருபதினுயிரம் மோசடி செய்யப்பட்டதாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இப்பரிசீலனையின் போது பணமாக ரூபாய் பன்னீராயிரமும் அங்கத்தவர்களுக்குக் கொடுக்க வேண்டிய பணம் சம்பந்தமான காசோலை மோசடியினுல் ரூபாய் எண்ணுயிரமும் கையாடப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

இதுசம்பந்தமாக மேற்கொண்டு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை பற்றி கூட்டுறவு இலாகாவும் இச்சங்க நிர்வாகக் குழுவும் ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது.


பற்றறிகள்




சார்ச் செய்தும்

பழுது பார்த்தும்

உத்தரவாதத்துடன்

கொடுக்கப்படும்.

முருகன் எலக்றிக்கல் ஸ்ரோர்ஸ்

6/8, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



சிரநேத்திராஞ்சன தைலம்'

விடுதலையளிக்கும்போது

நீங்கள்

சிரசு கண் மூக்கு

சம்பந்தமான வியாதிகளினுல் துன்புறவும்

வேண்டுமா ?

தினமும் சிரசிலிருக்கும் இத்தைலத்தின் சக்தி நிறைந்த

ஒவ்வொரு 20 சொட்டுப் பிரமாணமும்

ஆச்சரிய பலனையளிக்கும்!

காலம் நீடித்த நோயாளர் எம்மிடம் தொடர்பு

கொள்ளவும்:

மு. க. ஜெகநாதன்

யூனுனி கண் நிபுணர்

பெரியகடை யாழ்ப்பாணம்



வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


# 'தேசியக் கல்விமுறை அரசியல்வாதிகளால் உருவாகக் கூடாது'

## பல்கலைக்கழக விரிவுரையாளர் கருத்து

யாழ்ப்பாணம், புதன்

"பாடசாலைகள் சமூகப்பாடசாலைகளாக இருக்கவேண்டும். அத்தோடு அவை சமூகசேவையிலீடுபடவேண்டும். பாடசாலைகளே ஒரு சமூகமாக இருக்க வேண்டும்."

இவ்வாறு இலங்கைப் பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு. கே. நேசையா நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணம் சுண்டிக்குளி, மகளிர் கல்லூரிப் பழைய மாணவர் தின வைபவத்தில் சொற்பொழிவாற்றுகையில் கூறினுர். திரு. நேசையா மேலும் குறிப்பிட்டதாவது:-

சிறந்த சமுதாயத்தை உருவாக்குவது கல்வி.கல்விச் சுதந்திரஇல்லாவிட்டால் ஒரு சுதந்திரம்மும் இருக்கமாட்டாது.

தனித்தியங்கும் பாடசாலைகளை நடாத்துவதற்கு அமெரிக்கா ரஷயா ஆகிய நாடுகளிலும் இதர மேற்கு நாடுகள் பலவற்றிலும் சுதந்திரமுண்டு இந்தியாவில் சுயேச்சைப் பள்ளிக்கூடங்களும் நிறுவப்படலாம் எனத் தீர்மானித்துள்ளார்கள் கம்யூனிஸ்ட் நாடுகளை விட வேறு எந்த நாட்டிலும் பள்ளிக்கூடங்கள் அரசாங்கச் சொத்தாகமாட்டா.

இன்றைய உலகத்தில் அரசியல் வாதிகளிடையே அதிகாரப் பசி தாண்டவமாடுகிறது. அரசியல்வாதிகள் பாராளுமன்றம் ஏறியதும் தம்சொந்த விருப்ப வெறுப்பிற் கேற்ப நடந்துகொள்கிருர்கள். பிள்ளைகள் தமது உரிமைகளைப் பயன்படுத்திக் கொள்ளவும் கடமைகளைச் செய்ய பழகிக்கொள்வதற்குக் கல்வி முறை உதவியளிக்க வேண்டும். இதைப் பிள்ளைகளுக்கு உணர்துவதற்குப் பள்ளிக் கூடங்கள் ஜன சமூக அமைப்பிற்கும் ஜனசமூக சேவைக்கும் ஏற்றதாக இருக்க வேண்டும். ஜன சமூகத்திற்காகவும் ஜன சமூகத்தினுலுமே பள்ளிக்கூடம் நடைபெற வேண்டும். எனவே, சமூகத்தின் விருப்புக்களும் தீர்மானங்களுமே பாடசாலைகளை நடத்தும் முறையில் நிலைக்க வேண்டும். அரசாங்கத்தினர் எண்ணங்களல்ல! இதை முன்னேற்றமடைந்த எல்லா நாடுகளும் ஏற்றுக்கொள்ளுகின்றன. ஜன சமூகங்களே பாடசாலைகளின் உரிமையாளர்கள்.

தேசியக் கல்வி முறை மக்களிடமிருந்தே எழ வேண்டும். அரசியல் வாதிகளிடமிருந்ததல்ல! மக்களிடமிருந்து உருவாகும் கல்வி முறையைத்தான் தேசியக் கல்விமுறை எனலாம்' கல்வி முறையை ஏற்றுக்கொள்வதோ நிராகரிப்பதோ அரசியல் வாதிகள்ல்ல. அதை ஏற்றுக்கொள்ளும் பொறுப்பு மக்களிடமே தங்கியுள்ளது. எனவே மக்கள் கழகங்கள் பள்ளிக்கூடங்களின் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

திருமதி எஸ். நடராஜா நன்றியுரை கூறுகையில் தனித்தியங்கும் பள்ளிக்கூடங்களின் நிலைமை சரியாக இன்னும் நிர்ணயிக்கப்பட வில்லையென்றும் ஜனநாயக நாட்டில் மக்களின் சுயமுயற்சிகள் ஊக்குவிக்கப்படாவிட்டாலும் சுயமுயறசிக்குச் சுதந்திரமாவது இருக்க வேண்டுமென்றும் கூறினுர்.

## வெளிமாணவர்களுக்கு மற்றுமொரு சந்தர்ப்பம்

கண்டி, செவ்வாய்

வெளி மாணவர்கள் எனப் பதிவு செய்து கொள்வதற்குத் தரமுடையவர்கள், என்று கடைசியாக நடைபெற்ற பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சையின் முடிவின் பேரால் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள், வெளி மாணவர்கள் எனத் தங்களைப் பதிவு செய்யாது இருப்பார்களேயானுல் அவர்களுக்கு மீண்டுமொரு முறை புகுமுகப் பரீட்சையில் தோன்றுவதற்கு வசதியளிக்கப்படும். இவர்கள் விடுதியில் வதியும் மாணவர்களாக இருப்பதற்கு விருப்பமிருந்தால் இன்னுமொருமுறை புகுமுகப் பரிட்சைக்குத் தோன்றி விடுதியில் சேர்ந்து கொள்ளலாம்.

விடுதியில் வதியும் மாணவர்களாவதற்கு இவர்கள் புகுமுகப் பரீட்சையில் தவறினுல் திரும்ப அவர்கள் வெளி மாணவர்களாகத் தம்மைப் பதிவு செய்துகொள்ளலாம்.

பல்கலைக்கழக 'செனற்' சபை இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது எனப் பல்கலைக் கழகப் பதிவுகாரர் திரு. டபிள்யூ. ஏ. ஜயவர்த்தன கூறியுள்ளார்.

## வழிப்பறிக் கொள்ளை

காலி, செவ்வாய்

வழிப்பறிக் கொள்ளையடித்ததாக அகங்கம பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்ட அகங்கமையைச் சேர்ந்த ஹெற்றிகிவேஜ் பண்டுலசோமாவை காலி அடிஷனல் நீதிபதி திரு. டி. ஈ. தர்மசேகரா ரூ. 750 பிணையில் செல்ல அனுமதித்தார்.

காலி, மஹிந்தா கல்லூரியின் ஆசிரியரான திரு. ஏ. பீ. டி' சில்வா, பிற்பகல் 2-30 மணியளவில் அவருடைய வீட்டுக்குச் செல்லும் வழியில் பண்டுலசோமா அவரை எதிர்த்து தடியொன்றினுல் அடித்த பின்னர் அவ்வாசிரியரிடமிருந்த 55 ரூபாய் பெறுமதியான பேனுவையும் 5 ரூபாய் பெறுமதியான மற்றௌரு பேனுக்களையும் பறித்ததுடன் ஷேட் பாக்கட்டுக்குள்ளிருந்த 110 ரூபாயையும் எடுத்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டது.

## 1,20,000 மக்கள் அவதி

### கிழக்கு பாகிஸ்தானில் வெள்ளத்தின் கொடுமை

டாக்கா, ஜூன் 20

கிழக்குப் பாகிஸ்தானில் பெருமழை காரணமாக கோமதி ஆறு பெருக்கெடுத்ததன் விளைவாக 75,000 சதுர மைல் பிரதேசத்தில் வெள்ளம் புகுந்து சேதம் விளைவித்துள்ளது.

இப்பிரதேசத்திலுள்ள ஒரு லட்சத்து இருபதினுயிரம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பலரும் இப்பகுதியைவிட்டுப் பாதுகாப்பான இடங்களுக்குக் குடிபெயர்ந்து கொண்டுள்ளனர்.

வெள்ள அகதிகளுக்கு நிவாரணம் வழங்கும் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

# வேலை விபரம் தெரிவிக்க தனிப் பகுதி

## தொழில் இலாகா முயற்சி

கொழும்பு, ஜூன் 20

எத்தகைய வேலைகள் கிடைக்கும் என்ற விபரங்களை விளக்கும் அறிக்கைகளை எட்டாம் வகுப்புப் பொதுத் தராதரப் பத்திர வகுப்புப் போன்றவற்றிற் படிக்கும் மாணவர்களுக்கு கொடுப்பதற்காகத் தனிப்பகுதியொன்றை நியமிக்கத் தொழில் இலாகா தீர்மானித்திருக்கிறது.

வேலை விபரம் எனப்படும் இப்பகுதி அவ் விபரங்களைக் கல்வி இலாகா மூலம் வெளியிட்டுப் பள்ளிக் கூடங்களுக்கு அனுப்பிவைக்கும். பள்ளிக கூடங்களிலிருந்தும் விலகவிருக்கும் மாணவருக்கு உதவி செய்யும் முகமாகக் கொண்டு வந்த இப் பிரேரணையைக் கல்வி இலாகாவும், தொழில் இலாகாவும் ஆதரிக்கின்றன. எத்தகைய வேலைகள் கிடைக்கும் அவற்றிற்கு எவ்வளவு சம்பளம் போன்ற விபரங்களை மாணவர்களுக்கு அறிவிக்க இது ஏதுவாகவிருக்கின்றது.

அரசாங்கத்திடமிருந்தும், தனியார் ஸ்தாபனங்களிலிருந்தும் தேவையான விபரங்களைப் பெற்றுக் கல்வி இலாகாவுக்கு அளிப்பதிற் தொழில் இலாகா உதவி செய்யும். இப் பகுதியை நடத்துவதற்கு நியமிக்கப்பட்ட இரு அதிகாரிகள் கல்வி இலாகாவிற்பயிற்சி பெறுகின்றனர்.

பள்ளிக் கூடத்திற் படித்துக்கொண்டிருக்கும் போதே, பள்ளிக்கூடம் விட்ட பின்னர் எத்தகைய வேலைகள் கிடைக்க இடமிருக்கிறதென்பதை மாணவர்கள் தெளிவாக அறிந்து கொள்வர். துண்டுப் பிரசுரங்கள் மூலமும், இலவச யோசனைப் பத்திரங்கள் மூலமும், வேலை விபரப் பத்திரங்கள் மூலமும், இவ் விபரங்கள் அறிவிக்கப்படும். இவற்றைத்தவிர குறிப்பிட்ட வேலைகளின் விபரங்கள், பயிற்சி முறைத் திட்டம் போன்றதையும் மாணவருக்களிக்கப்படும். ஆசிரியர் சிரேஷ்ட வகுப்புக்களிலுள்ள மாணவர்களுக்குத் தேவையானவற்றை விளக்க வேண்டும் என்ற வேண்டுகோளுடன், சுமார் 50 இலவச போசனைப் பத்திரங்கள் ஏற்கெனவே கல்வி இலாகாவாற் பள்ளிக் கூடங்களுக்கனுப்பப் ட்டது.


அழகிய பெனியன்! கால்மேஸ்!!

"லேடன்" தயாரிப்பு

Leyden L.I.L

யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகின்றன!

பல தினுசுகள்! பல அளவுகள்!!

எங்கும் கிடைக்கும்.

இன்றைய தேவை: சுதேசிப் பொருள் ஆதரவு!

அதற்கு வழி "லேடன்" பெனியன்கள் கால்மேகளே அணிவதே.

உறுதியிலும் உயர்ச்சியிலும் மேனுட்டு பெனியன்களையும், கால்மேஸ்களையும் மிஞ்சியது

"லேடன்" பெனியன்களும், கால்மேஸ்களும்

தொழிற்சாலை

7, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# யாழ்ப்பாண மாநகரசபை-நிர்வாகச் சீர்திருத்த ஆலோசனைகுழு நாளை கூடுகிறது

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் மாநகரசபையின் நிருவாகச் சீர்திருத்தம் சம்பந்தமாக ஆலோசனை கூறுவதற்கு தெரிவு செய்யப்பட்ட ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட விசேஷ குழுவின் கூட்டம் இம்மாதம் 22-ம் திகதி வியாழக்கிழமை நடைபெறும்.

மாநகரசபை நிருவாகம் சம்பந்தமாக அவ்வப்போது கூடி ஆராய்ந்து சபைக்கு ஆலோசனை கூறவே இக்குழு நியமிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

திரு. ஜேக்கப்பைத் தலைவராகக் கொண்ட இந்த விசேஷ குழுவில் டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கம், ஹாஜி. வி. எம் எம். அபுசாலி, திருவாளர்கள் ஏ. ஜி. இராஜசூரியர், ஏ. துரைராசசிங்கம் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

## அரசாங்க உத்தியோகம்

### மதகுருக்களை நீக்க உத்தரவு

கொழும்பு, செவ்வாய்

இவ்வருடம் ஜூன்மாதம் முதல் திகதிக்குப் பின்னர் அரசாங்கசேவையில் நியமிக்கப்பட்ட சகல மதத்தைச்சேர்ந்த மதகுருக்கள்களையும் சேவையிலிருந்து நீக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி சகல அமைச்சுகளுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க சேவை, ஸ்தல ஸ்தாபன சேவை, அரசாங்க ஆதரவுள்ள கூட்டுஸ்தாபனங்கள் ஆகியவைகளில் பொது மக்கள் ஆற்றக்கூடிய பதவிகளுக்கு எந்தமதத்தைச்சேர்ந்த மதகுருக்களும் இனி நியமிக்கப்படக்கூடாதென்று அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சுக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜூன்மாதம் முதல்திகதிக்குப் பின்னர் அரசாங்கசேவையில் நியமிக்கப்பட்ட மதகுருக்களை வேலையிலிருந்து நீக்குமுன் போதியகால முன்னறிவித்தல் கொடுக்கக்கப்பட வேண்டுமென்றும் அமைச்சுக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## பன்றிகளுக்கு உணவாகும் பாடசாலை பனிஸ்!

கொழும்பு, செவ்வாய்

களனி, மஹாரு பாடசாலைகளில் பயிலும் மாணவர்களில், மிகவும் குறைந்த அளவானவர்களே 'கெயர்' பாலை அருந்துகின்றார்களென்றும் ஏராளமான மாணவர்கள், தங்களுக்கு வழங்கப்படும் 'பணிஸை' வெளியே எறிந்துவிடுகின்றார்களெனவும் தெரிகிறது.

சபுகஸ்கண்ட சிரேஷ்ட பாடசாலையில் சராசரி 1,300 மாணவர்கள் பாடசாலைக்கு தினமும் வருகின்றார்கள். ஆனால் இத்தொகையில் 50 க்குக் குறைந்தவர்களே பால் அருந்துகின்றார்கள்.

மாணவர்கள் வீசும், 'பணிஸ்' களைக் கிராம மக்கள் தங்கள் பன்றிகளுக்கு உணவாக உபயோகிக்கின்றனர்.

## நாலரை லட்சம் டாலர் உதவி

நியூயோர்க், ஜூன் 20

ஆசிய நாடுகளின் உதவித் திட்டத்திற்கா போர்ட் ஸ்தாபனம் நான்கு லட்சத்து ஐம்பதினாயிரம் டாலர் ஒதுக்கியுள்ளது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7, பகல் 12-45, மாலை 6, இரவு 9)

புதன் 21-6-61

காலை 6-45 உதயகீதம் 6-50 சைவநற்சிந்தனை 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை 7-15 காலைக் கதிர் 7-30 திரை இசை 8-00 புல்லாங்குழல் 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம் 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள் 5-15 இளைஞர்மன்றம் 5-45 திரை இசை 6-15 கிராம சஞ்சிகை 6-45 வீணை.

இரவு 7-00 நேயர் விருப்பம் 7-30 பேச்சு 7-45 குரல் இசை 8-45 இஸ்லாமிய நிகழ்ச்சி 9-45 இஸ்லாமிய கீதங்கள் 10-00 கானமஞ்சரி.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15)

காலை 7-00 இசைக்கதிர் 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள் 7-30 காரைக்குடி கே. கமலா—வீணை

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு 1-00 பெண்ணுலகம் 2-10 எஸ். திருவேங்கடம் ஐயங்கார்—பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்) 5-45 இசைப் பயிற்சி 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 சென்னை அஞ்சல் 7-45 'ஆசிரியர் அருணகிரி'—நாடகம் 8-00 காரைக்குடி கே. கமலா—வீணை 8-30 திரைப்பட இசை 9-15 நல்லுரை 9-30 டெல்லி அஞ்சல்.

## நாட்டுக்கேற்ற கல்வித் திட்டம்

சிலாபம், செவ்வாய்

தான் ஒரு முஸ்லிமாக இருந்தபோதிலும், இன மத வேறுபாடின்றி தேசிய கல்வித் திட்டதை மக்கள் அனைவருக்கும் வகுத்திருப்பதாக கஹலக்செல மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கல்வி மந்திரி திரு. பதியூதீன் மஹ்மூத் பேசும்போது குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், புதிய கல்வித் திட்டத்தின்படி, கிராம மாணவன் கூட இலங்கையின் பிரதம மந்திரிப் பதவியை வகிக்க முடியுமென்று கூறினர்.

மக்களுக்கு உதவி புரிவதில் அரசாங்கம் தன்னாலியன்ற முயற்சிகளைச் செய்கின்றது. ஆனால் அரசாங்கத்தை தோல்வியடையச் செய்யும் முயற்சியிலும் ஒரு சாரார் உளர். அவர்கள் அரசாங்கத்துக்கு மட்டுமின்றி பொதுமக்களுக்கும் எதிரிகளாக இருக்கின்றனர் என்றும் திரு. பதியூதீன் மஹ்முத் கூறினர்.

## அசோக் மேத்தா இலங்கை வருகிறார்

கொழும்பு, செவ்வாய்

இந்திய பிரஜா சோஷலிஸ்ட் கடசித் தலைவர் திரு. அசோக் மேத்தா இவ்வாரம் இலங்கைக்கு வருவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய பார்லிமெண்ட் அங்கத்தவரான திரு. அசோக் மேத்தா தனிப்பட்ட முறையில் இலங்கைக்கு வருகிறார்.

## கல்லடியில் கனிஷ்ட தொழில் நுட்பக்கல்லூரி

காத்தான்குடி, செவ்வாய்

மட்டக்களப்பின், கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி கல்லடியில் நிறுவப்பட இருக்கிறது. இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி இலாகா டைரக்டருடன் தொடர்பு கொண்டு இத் தொழில் நுட்பக் கல்லூரி நிறுவப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய இருப்பதாகக் கிழக்கு மாகாணக் கல்வி அதிகாரி தெரிவித்தார்.

## நைஜீரிய நிதி மந்திரி

### இன்று கராச்சி வருகிறார்

கராச்சி, ஜூன் 20

நைஜீரிய நிதி மந்திரியின் தலைமையில் நைஜீரிய பொருளாதார உதவித் தூதுகோஷ்டியொன்று நாளை புதன்கிழமை கராச்சி வந்து சேர்கிறது. உணவு விவசாய மந்திரி, கல்வி மந்திரி, வர்த்தக மந்திரி, கைத்தொழில் அபிவிருத்தி மந்திரி ஆகியோருடன் இத் தூதுகோஷ்டி பேச்சுவார்த்தை நடத்தும்.

## மாணிக்கவாசகர் குருபூசை

முள்ளியவளை, திங்கள்,

வித்தியானந்தக் கல்லூரி மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் இன்று மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை, விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. மாணவ மாணவியர் திருவாசகம் ஓதினர்.

## பார்லிமெண்டரி காரியதரிசி பதவிகள்

### மாற்றம்செய்ய யோசனை

கொழும்பு, செவ்வாய்

பார்லிமெண்டரிக் காரியதரிசி பதவிகளில் மாற்றம் செய்வது பற்றியும் பார்லிமெண்டரிக் காரியதரிசிகளுக்கு அதிக பொறுப்பும் கடமையும் அளிப்பது பற்றியும் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

அபிவிருத்தித் திட்டங்கள் சம்பந்தப்பட்ட அமைச்சில் சேவைசெய்ய தனக்குச் சந்தர்ப்பமளிக்க வேண்டுமென்று பார்லிமெண்டரிக் காரியதரிசியொருவர் பிரதமர் சிறிமாவிடம் கோரியதைத் தொடர்ந்தே பார்லிமெண்டரிக் காரியதரிசி பதவிகளில் மாற்றம் செய்வது பற்றியும் அவர்களுக்கு அதிக பொறுப்பு வழங்குவது பற்றியும் பிரதமர் ஆலோசனை செய்து வருகிறார்.

பார்லிமெண்ட் கூட்டத்தொடர் ஒத்திவைக்கப் பட்டபின் பார்லிமெண்ட் காரியதரிசி பதவிகளின் மாற்றம் பற்றி பிரதமர் தமது இதர மந்திரிகளுடன் கலந்தாலோசனை செய்வாரென்று தெரிகிறது.

## வருடாந்த மகோற்சவம்

காத்தான்குடி, செவ்வாய்

கல்லடி உப்போடை, ஸ்ரீ சித்திவிநயகராலய வருடாந்த மகோற்சவம் கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமானது. இவ்வுற்சவம் 27-ம் திகதி நடைபெறும். தீமிதிப்பு வைபவத்துடனும், மறுநாள் நடக்கவிருக்கும் தீர்த்தோற்சவத்துடனும் முடிவடையும்.

## அல்ஜீரிய புரட்சி

### மற்றொருவருக்கு 12 வருடக் கடூழியச்சிறை

பாரிஸ், ஜூன் 20

அல்ஜீரியாவில் சமீபத்தில் தோல்வியில் முடிவடைந்த இராணுவப்புரட்சிக்கு உதவி புரிந்ததாகக் குற்றம்சாட்டி பாரிசில் இராணுவ உயர்நீதிமன்றத்தில விசாரணை செய்யப்பட்ட பிரஞ்சு விமானப்படை அதிகாரியொருவருக்கு 12 வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது,

அல்ஜீரியாவில் இராணுவப் புரட்சி தோன்றியபோது அப் புரட்சிக்கு உதவி புரிவதற்காக பிரஞ்சு விமானப்படையைச் சேர்ந்த இரண்டு விமானங்களை இந்த அதிகாரி அல்ஜீரியாவுக்கு அனுப்பிவைத்ததாகக் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

## பத்தேசிங்குக்கு நேரு கடிதம்

புதுடில்லி, ஜூன் 20

அகாலி இயக்கத் தலைவர் திரு. சான்பத்தேசிங்குக்கு பிரதமர் நேருவிடமிருந்து ஒரு கடிதம் கிடைத்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது. ஆனால் கடிதத்தில் என்ன எழுதப்பட்டிருந்ததென்பது பற்றி எதுவும் வெளியிடப்படவில்லை.


உருவ அமைப்பிலும் உயர்தர உழைப்பிலும் பல வருட காலமாக திகழ்கின்ற சாதனங்கள்.

★ வூல்ஸிலி — மண்ணெண்ணெயில் இயங்கும் நீர்ப்பாய்ச்சும் இயந்திரங்கள்

★ சீமென்ஸ் — மின்சாரத்தில் இயங்கும் நீர்ப்பாய்ச்சும் இயந்திரங்கள்

★ S. M. C. — மின்சாரத்தில் இயங்கும் நீர்ப்பாய்ச்சும் இயந்திரங்கள்.

★ B. S. A. (பி. எஸ். ஏ.) மோட்டார் சைக்கிள்கள்

மோட்டார் வாகனங்களுக்கு இன்றியமையாதனவான

★ "பிறிஸ்டன்" டயர்களும்

★ "ஓல்டாம்" பட்டரிகளும் எங்களிடம் கிடைக்கும்.

ஓட்டோஸ் லிமிட்டெட்

யாழ்ப்பாணம். கிளை: ஓட்டோஸ் லிமிட்டெட் வவுனியா.

வரதட்சணை வேண்டுமா?

# ஐயாயிரம் அபராதம் ஆறுமாதம் சிறை!

புதுடில்லி, ஜூன் 20

ஜூலை மாதம் 1ம் திகதியில் இருந்து வரதட்சணைத் தடை மசோதா அமுல் நடத்தப்படும் என்றும் இந்த மசோதாவின்படி வரதட்சணை வாங்குவதோ அல்லது கொடுப்பதோ குற்றமாகும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வரதட்சணைத் தடை மசோதாவின்படி குற்றவாளிகளாகக் காணப்படுபவர்களுக்கு 5000 ரூபாய் அபராதம் அல்லது 6 மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அநுராதபுரத்துக்கு விசேஷ ரயில் சேவை

கொழும்பு, புதன்

அநுராதபுரத்தில் போசன் விழாவின்போது விசேஷ புகையிரதங்களைவிட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. புனிதத் தந்தமும் அங்கு காட்சிக்கு வைக்கப்படவிருப்பதால் இவ்வாண்டு ஏராளமானவர்கள் அநுராதபுரம் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. 20 விசேஷ புகையிரதங்கள் அங்கு விடப்படும் என அறிவிக்கப்படுகிறது.

# காங்கேசன்துறைஐயனார் கோயிலில் பலி நிறுத்தம்

மாவிட்டபுரம், செவ்வாய்

காங்கேசன்துறை அரசினர் வைத்தியசாலைக்கு அருகாமையில் அமைந்திருக்கும் ஐயனார் கோவிலில் அடுத்தவருடத்திலிருந்து ஆடு, கோழி வெட்டுவதில்லையென்று கடந்தஞாயிற்றுக்கிழமை அக்கோவிலில் நடந்த பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இக்கூட்டத்திற்குப் பட்டினசங்கத்தலைவர் திரு. ஆ. வ. சதாசிவம் தலைமை வகித்தார். அடுத்த வருடத்திலிருந்து மிருகபலியிடுவதனை நிறுத்தி ஐயனார் கோயிலைப் புதுப்பித்து கும்பாபிஷேகம் செய்து உற்சவங்கள் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## புதிய இலாகா துரிதமாகச் செயலாற்றுகிறது

கண்டி, செவ்வாய்

ஆங்கிலத்தை இரண்டாம் பாடமாகப் படிப்பிப்பதற்காக இலங்கைச் சர்வகலாசாலையில் ஆரம்பிக்கப்பட்ட புதிய உப இலாக்கா வேலைகளைத் துரிதமாகக் கவனித்துக்கொண்டிருக்கிறது.

நேரடி அனுபவங்களைப் பெறுவதற்காக, கலை அல்லது கீழைத்தேசமொழிகளைப்படிக்க புதிதாக சர்வகலாசாலையில் சேரும் தமிழ்,சிங்கள மாணவர்களுக்கு உப–இலாக்கா ஆங்கிலம் சொல்லிக்கொடுத்து வருகிறது.

# நாட்டின் அபிவிருத்திக்கு வழி

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தைப் பெருக்குவ தோடல்லாமல், செல்வத்தை நியாயமான முறையில் பங்கிட்டுக் கொடுக்கவேண்டும். உழைப்புக்கேற்ற பலன் கிடைத்தால் மக்களும் உற்சாகமாக உழைப்பார்கள். நாடும் முன்னேற்றமடையும்.

இலங்கையின் இயற்கை வளத்தை எவ்வழிகளில் பயன்படுத்தலாம் என்பதற்கு நிபுணர்களைக் கொண்டு ஆராய்ச்சி செய்தல் வேண்டும் நமது நாட்டிலுள்ள வளங்கள் எவ்வளவோ பயன்படாதிருக்கின்றன. நமது பலத்தை நாமே உணராமல் இருப்பது மதியீனம். ஆராய்ச்சியும், விடாமுயற்சியும், உழைப்பும் இல்லாத எந்தநாடும் முன்னேற்ற மடைய முடியாது.

### தொழிலுக்கு மதிப்பு

தொழிலுக்கு உண்மையான மதிப்பு ஏற்படவேண்டும். நமது நாட்டிலுள்ளோர் பலர் அரசாங்க வேலைகளிலேயே நாட்டங்கொண்டுள்ளனர். களனிகளிலும், வயல்களிலும், ஆலைகளிலும் வேலைசெய்ய மக்கள் முன்வரவேண்டும். வேலையில்லாது சோம்பியிருப்பதிலும், கிடைக்கும் தொழிலைக் கடமையுணர்ச்சியோடும், பொறுப்புணர்ச்சியோடும் செய்வதற்குச் சித்தமாயிருக்கவேண்டும். உழைப்பின் மேன்மையை உணராது பல மக்கள் வாழுகின்றனர். உழையாது இருப்பவன் உணவு உட்கொள்ள உரிமையற்றவன் எனக் காந்தியடிகள் கூறியுள்ளார். எனவே, மக்கள் ஒவ்வொருவரும் உழைத்து உரிமையோடு வாழவேண்டும். அதுவே உண்மையான உரிமை வாழ்வு.

அடுத்தபடியாக நமது நாட்டின் கலாச்சாரத்திற்கேற்ற வாழ்க்கையை மக்கள் வாழவேண்டும். அப்பொழுதுதான் நமது நாட்டிலே உற்பத்திசெய்யும்பொருள்களைமக்கள் வாங்கி நம்நாட்டுத் தொழில்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பார்கள். அதற்காகப் பிறநாட்டிலேயிருந்து நமக்கு அத்தியாவசியமான பொருள்களைப் பெறக்கூடாது என்று சொல்லவில்லை. நமது நாட்டிலே உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களை நாமே உற்பத்தி செய்துகொண்டு தேவையானவற்றை மட்டும் இறக்குமதி செய்வதில் தவறு எதுவுமில்லை.

இலங்கை விவசாய நாடாகையால் விவசாயத்தில் முக்கிய கவனம் செலுத்தவேண்டும். ஆனால் விவசாயத்தை மாத்திரம் நம்பியிராது. கூடிய வரையில் கைத்தொழில்களையும் விருத்தி செய்யவேண்டும்.

பெரிய ஆலைகளையோ, விவசாயத் திட்டங்களையோ அமைத்து நடத்தக் கூடிய பெரும் செல்வர் வெகுசிலரே நமது நாட்டிலுளர். இந்நிலையில், நமது பொருளாதார வளர்ச்சிக்குத் திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தையே சார்ந்தது. அரசாங்கமே எல்லாவற்றையும் செய்யவேண்டும் என்பது இதன் கருத்தல்ல. நாட்டிலுள்ள ஸ்தாபனங்களும், சங்கங்களும் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கவேண்டும்.

நமது பொருளாதாரம் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆகவே கைத்தொழில்களையும் ஆரம்பித்து இதைக் கலப்புப் பொருளாதாரமாக்க வேண்டும். பொருள் வளத்தைப் பல துறையில் விருத்தி செய்யவேண்டும். இதுவே நாட்டின் பொருளாதார சுபிட்சத்துக்கு வழிவகுப்பதாக இருக்கும்.

# "எல்லையைக்கண்காணிக்க பாதுகாப்புசபை நிறுவவேண்டும்"

## பிரஜாசோஷலிஸ்ட்கட்சி விடுத்துள்ள தேர்தல் விஞ்ஞாபனம்

புதுடில்லி, ஜூன்20

பிரஜா சோஷலிஸ்ட் கட்சியின் நிர்வாகசபை, இன்று தன் தேர்தல் அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. 5000 வார்த்தைகள் இந்த அறிக்கையில் அடங்கியுள்ளன.

"பாகிஸ்தான்,சீனா, போர்த்துக்கல் ஆகிய நாடுகள் இந்தியா மீது ஆக்கிரமிப்பு நடத்தியிருக்கின்றன. இவற்றை முறியடிக்க அரசாங்கம் தவறிவிட்டது. மக்களை, ஆக்கிரமிப்புக் கெதிராக ஒன்று திரட்ட அரசாங்கம் தவறிவிட்டது. நாட்டின் எல்லையைப் பாதுகாக்க பாதுகாப்பு சபை ஒன்று அமைக்கப்படவேண்டும். செல்வாக்குள்ள சிவில் ராணுவ அதிகாரிகள் இச்சபையில் அங்கம் வகிக்க வேண்டும்.

அரசாங்கத்தின் உள்நாட்டுக் கொள்கையின் காரணமாக சிறுபான்மை மக்களிடையே நீதி கிடைக்கவில்லை என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. உள்நாட்டுக் கொள்கையினால் வகுப்பு, ஜாதிப்பற்று ஏற்பட்டு நாட்டின் ஐக்கியத்துக்கு ஆபத்து உண்டாகிறது" என்று விஞ்ஞாபனம்கூறுகிறது.சமயச்சார்பற்ற கொள்கையே சோஷலிஸ்ட் கட்சியின் லட்சியம் எனவும் விஞ்ஞாபனம் வெளிப்படுத்தியிருக்கிறது.

கோவாமீது பொலிஸ் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அதன் தீர்மானம் ஒன்று கூறுகிறது.

## பழுதடைந்த ஆயுதங்களை கடலுள் எறிய கடற்படை உதவும்

கொழும்பு, செவ்வாய்

பறிமுதல் செய்யப்படும் கத்திகளையும், பழுதடைந்த துப்பாக்கிகளையும் கடலில் எறியும் வேலை கடற்படையினரிடம், ஒப்புவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இதுசம்பந்தமான வேலையை உடனே பொறுப்பேற்குமாறு திறைசேரி, கடற்படைத் தளபதியைக் கேட்டுள்ளது.

## மார்க்கெட் விலைவாசிகள்

## தங்கம், வெள்ளி மார்க்கெட்

யாழ்ப்பாணம், செவ்வாய்

| | ரூ. ச. |
|---|---|
| புடத்தங்கம் | 106 - 00 |
| நகைப்பவுன் | 98 - 00 |
| தங்கப்பவுன் | 102 - 00 |
| அரைத்தங்கப்பவுன் | 55 - 00 |
| மூஸ்வெள்ளி தோலா | 2 - 25 |

மார்க்கெட்டிங் இலாகா (யாழ்ப்பாணக்கிளை) இவ்வாரம், சில்லறையாக காய்கறிகளை விற்கும் விலை கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

| | | ரூ—ச |
|---|---|---|
| கோவா | ருத்தல் | 0 - 55 |
| புடலங்காய் | " | 0 - 18 |
| கத்தரிக்காய் | " | 0 - 38 |
| போஞ்சி(பட்டர்) | " | 0 - 65 |
| போஞ்சி(மற்றரகம்) | " | 0 - 65 |
| காரட் | " | 0 - 75 |
| லீக்ஸ் | " | 0 - 55 |
| சாம்பல் வாழைக்காய் | " | 0 - 15 |
| பிஞ்சுமிளகாய் | " | 0 - 60 |
| வெண்டைக்காய் | " | 0 - 45 |
| பொன்னாங்காணி | " | 0 - 22 |
| வல்லாரை | " | 0 - 90 |
| பூசனிக்காய் | " | 0 - 14 |
| சுத்தமானநெய் | போத்தல் | 6 - 50 |
| நாட்டு பச்சை அரிசி (தலைவெட்டியது) | கொத்து | 0- 65 |
| புழுங்கல் அரிசி (தலைவெட்டியது) | கொத்து | 0- 75 |
| புளி | " | 0 - 85 |
| தேங்காய் எண்ணெய் | போத்தல் | 0 - 80 |
| எள் எண்ணெய் | " | 2 - 50 |
| வெள்ளைப்பூடு, (மார்க்கெட்நிலை) | ரூ. | 1 - 47 |

### கூட்டுறவு மொத்த விற்பனவு இலாகா

| | |
|---|---|
| உருளைக்கிழங்கு (இந்தியா) | 0 - 33 |
| உருளைக்கிழங்கு (இத்தாலி) | 0 - 27 |
| மிளகாய் (1-ம் நம்பர்) | 1 - 24 |
| ஸயாம் மிளகாய் | 1 - 03 |
| சின்னச் சீரகம் | 0 - 98 |
| மஞ்சள் | 0 - 57 |
| ஜப்பான் மல்லி | 0 - 95 |
| உளுந்து | 0 - 32 |
| பாசிப்பயறு | 0 - 36 |
| துவரம்பருப்பு | 0 - 30 |
| கடலைப்பருப்பு | 0 - 48 |
| சிந்தாமணிக் கடலை | 0 - 43 |
| பம்பாய் வெங்காயம் | 0 - 20 |
| வெள்ளைப்பூடு (பம்பாய்) ருத்தல் | 0 - 35 |

முருங்கைக்காய் 1க்கு 0 - 40 சதம். மிளகு 1 ருத்தல் ரூ. 3 - 22. (கட்டுப்பாட்டு விலை இல்லை)


இரண்டாவது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

நவா (கும்பனித்தெரு) மொடர்ன் (பதுளை)

★ அன்பும் பண்பும் அமைந்த அருங்குணவதி நீ. உன் வரவால் என் வாழ்வு உயர்ந்தது. உன் மனம் பரிசுத்தமானது. உன் செய்கைகள் யாவுமே பரிசுத்தமானது. என் வாழ்வு உள்ள மட்டும் நீ என் நெஞ்சிலே நிறைந்த நித்திய பாக்யவதி.

★ அவ்வளவு என்னைப் புகழவேண்டாம் அத்தான். எனக்கு அன்னையும், அப்பனும் ஆண்டவனும் நீங்களே. பொன், பொருள் ஒன்றும் நான் உங்களுக்கு கொண்டுவரவில்லை. ஆனல் தூய்மையிலேயே தொடுக்கப்பட்ட என் மனத்தையும், உயிர் சேர்ந்த உடலையும் உங்கள் சேவைக்காக அர்ப்பணித்து வாழ வந்திருக்கிறேன். நீங்களே எனக்கு நிலையான துணை.

இவையாவும் இணைக்கப்பட்ட தீந்தமிழ்த் திரைவிருந்து



பாலாஜி ★ பண்டரிபாய்
ராஜகோபால் ★ மைனுவதி
ஏ. கருணாநிதி ★ எம். சரோஜா

நடித்த எங்கள் குலதேவி

டைரக்ஷன்: ஏ. சுப்பராவ்
சங்கீதம்: கே. வி. மகாதேவன்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி மாலை 5-30 மணிக்கு மட்டும்
சனி, ஞாயிறு காலை 10 மணி பி. ப. 1-30 மாலை 5-30 மணிக்கும்

ஆனந்தன் — ஹேமலதா நடித்த

விஜயபுரி வீரன்

மனோஹரா (யாழ்ப்பாணம்) தினசரி காலை 10-30, மாலை 5-30

பெடறல் ஒப்பரேற்றர் 99

[சீரியல் படம்]

தினசரி மாலை 2 மணிக்கும் மாலை 3-45 மணிக்கும்

கிறிகொறி பெக் நடித்த

போக் சொப் ஹில்

PORK CHOP HILL

(ENGLISH)



இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஜூன் மாதம் 21-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது